PARAPARAPPU CHEITHI
# பரபரப்பு செய்தி
Tamil Fortnightly
மாதமிருமுறை இதழ்
புலனாய்வு இதழ்களில் புதிய பரிணாமம்
Volume : 27 ● Issue : 9 ● 2025 August 01-15 ● மலர் - 27 ● இதழ் - 9 ● 2025 ஆகஸ்ட் 01-15 ● ₹15



## நழுவிய மோடி திணறும் எடப்பாடி



## தர்மஸ்தலாவில் நரகவேட்டை..?

# கொத்துக் கொத்தாய் 100 பெண்களின் சடலங்கள்..?

## பின்னணியில் அரசியல் விஐபி..?

ஆனைமலை | நெப்போலியன்

# கேரளாவுக்கு கடத்தப்படும் கனிமவளங்கள்... கல்லாகட்டும் அதிகாரிகள்...

## சாட்டையை சுழற்றுவாரா முதல்வர்?

**கேரளாவில் ஆற்றில் மணல் எடுக்கவும், பாறைகளை உடைத்து கற்கள் எடுக்கவும், எம்.சாண்ட் உற்பத்தி செய்யவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே, அந்த மாநிலத்துக்கு தேவையான கனிமவளங்கள், தமிழகத்தில் இருந்து கொண்டு செல்லப்படுகின்றன. அதுவும், 70 சதவீதம் தேவையை கோவை மாவட்டமே பூர்த்தி செய்கிறது.**

கோவை மாவட்டத்தில், 2019 ஆம் ஆண்டில் 109 குவாரிகளுக்குதான் அனுமதி வழங்கப்பட்டது.ஆனால் தற்போது, 122 குவாரிகள் செயல்படுகின்றன. பொள்ளாச்சி தாலுகாவில் 26 குவாரிகள், ஆனைமலையில் 5 குவாரிகள், கிணத்துக்கடவில் 47 குவாரிகள் என, பொள்ளாச்சி வருவாய் கோட்டத்தில் மொத்தம் 78 குவாரிகள் உள்ளன. இந்த குவாரிகளில் பெரும்பாலும், எம்.சாண்ட், பி.சாண்ட், சைஸ் கற்கள், சக்கைக்கற்கள் என, ரகம் வாரியாக உடைத்து எடுக்கப்படுகின்றன. அதில், 20 சதவீதம் உள்ளூர் கட்டுமான பணிகளுக்கும், 80 சதவீதம் கேரளாவுக்கும் கொண்டு செல்லப்படுகின்றன.

பொள்ளாச்சி கோட்டத்தில் இருந்து, தினமும், குறைந்த பட்சம், 600 லோடு கனிமங்கள் கேரளாவுக்கு செல்கின்றன. கனிம வளங்களை அண்டை மாநிலங்களுக்கு கொண்டு செல்ல ஐகோர்ட் அனுமதி வழங்கியுள்ளது.

ஆனால், முறையாக அனுமதி பெற்றிருக்க வேண்டும். அனுமதிக்கப்பட்ட அளவில் மட்டுமே கொண்டு செல்ல வேண்டும் என, ஐகோர்ட் அறிவுறுத்தியுள்ளது. அது முறையாக நடைமுறைப்படுத்தப்படுகிறதா..? என்றால் கேள்விக்குறிதான்.

ஆனால், விதிமுறைகள் மீறப்பட்டு கனிம வள கடத்தல் வெகு ஜோராக நடக்கிறதாம்.



பொள்ளாச்சி கோட்டத்தில் இருந்து கேரளாவிற்கு கனிம வளங்கள் கடத்த பயன்படும் சாலைகளில் முக்கியமானதும், எளிதானதுமான சாலையாக ஆனைமலை, ஒடையகுளம் வழியாக செமனாம்பதி செல்லும் சாலை உள்ளது. இந்த சாலை கடத்தல்காரர்களுக்கு எளிதாக இருப்பதால் இதையே அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர். நாள் ஒன்றுக்கு சுமார் இருநூறு லோடு கனிம வளங்கள் அனுமதியின்றி இந்த வழியாக கடத்தப்பட்டு வருகிறது என்கின்றனர் சமூக ஆர்வலர்கள். அப்படி கடத்தப்படும் கனிமவளங்கள் மூலம், ஆனைமலை காவல்துறைக்கு ஒரு லோடுக்கு ஐநூறு ரூபாய் வீதம் இருநூறு லோடுக்கு ஒரு லட்சம் ரூபாயும், அதே கணக்கில் கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் மற்றும் வட்டாட்சியர் உள்ளிட்ட வருவாய் துறைக்கு ஒரு லட்சம் ரூபாயும் தினசரி மாமூலாக கொடுக்கப்பட்டு வருகிறது என சொல்கின்றனர் சமூக ஆர்வலர்கள்.



மு.க.ஸ்டாலின்



அமைச்சர் ரகுபதி

அதுமட்டுமில்லாமல், கேரள எல்லையயான செமனாம்பதி வரை அனுமதி சீட்டு வழங்க ஆனைமலை வருவாய் ஆய்வாளருக்கு லோடுக்கு ஐநூறு ரூபாய் வீதம் கப்பம் கட்ட வேண்டுமாம். இப்படி லட்சக்கணக்கில் கப்பம் கட்டிவிட்டுதானே கடத்துகிறோம் என்கிற தெனாவட்டில் டிப்பர் லாரியை அசுர வேகத்தில் இயக்கும் கடத்தல்காரர்களால் அதிகளவில் விபத்துகள் ஏற்படுவதோடு, சாலைகள் பெயர்ந்து ஆங்காங்கே குண்டும் குழியுமாகிவிடுவதாக வேதனை தெரிவிக்கின்றனர் சம்மந்தப்பட்ட கிராம மக்கள்.

அதுவும் குறிப்பாக, காலை வேலைகளிலும், மாலை வேலைகளிலும், பள்ளி நேரத்தில் குழந்தைகள் பள்ளிக்கு செல்லும் பள்ளி வாகனங்கள் இதனால் பெருமளவில் சிரமத்திற்கு ஆளாவதாக பெற்றோர்கள் ஆதங்கப்படுகிறார்கள். தவிர ஆனைமலை வழியாக செமனாம்பதி செல்லும் வழியில் அமைந்துள்ள வேட்டைக்காரன்புதூர், ஒடையகுளம் மற்றும் பல கிராம மக்கள் அனுதினமும் உயிர் பயத்தில் வாழ்ந்து கொண்டு இருப்பதாக கண்ணீர் வடிக்கின்றனர்.

கடத்தப்படும் கனிமவளங்கள்...




ஆனால், காவல்துறையோ, வருவாய் துறையோ இதைப் பற்றியெல்லாம் கடுகளவு கூட கவலைப்படாமல், தங்களுக்கு வரவேண்டிய மாமூல் கரெக்டா வந்தா போதும் என்கிற மனநிலையில் இருக்கின்றனராம்.

இந்நிலையில், கோவை மாவட்டத்திற்கு புதிதாக பொறுப்பேற்றுள்ள மாவட்ட ஆட்சியர் கனிம வளங்கள் கடத்தலை முற்றிலும் தடுப்பதாக உறுதியளித்துள்ளார். அதனை நாமும் நம்புவோம்..? என்ன நடக்கிறது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.. ■

அரசியல் | குமரகுரு

# விரைவில்... விஜய் - ராகுல் சந்திப்பு..?

## திரைமறைவில் உருவாகும் புதுக்கூட்டணி!



விஜய்

**தமிழக வெற்றிக் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு மதுரையில் நடைபெறும் என விஜய் அறிவித்ததில் இருந்து உற்சாகத்தில் இருக்கின்றனர் அக்கட்சியின் தொண்டர்கள். மாநாடு நடக்கும் ஆகஸ்டு 25 தேதி குறிப்பாக விஜயின் திருமண நாள் என்பது குறிப்பிடத்தக்கது. தே.மு.தி.க நிறுவனர் விஜயகாந்தின் பிறந்த நாளும் ஆகஸ்ட் 25 தான் என்பதும், முக்கியமானதாகப்பார்க்கப்படுகிறது.**

2026 சட்டமன்ற பொது தேர்தல் நெருங்கி வரும் நிலையில், தி.மு.கவும், அ.தி.மு.கவும் தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கி விட்டன. இந்த இரு கட்சிகளுக்கு அடுத்து தமிழகத்தில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருப்பது தமிழக வெற்றிக் கழகம். நடிகராக இருந்து அரசியல் கட்சி தலைவராக உருமாறி இருக்கும் விஜய், கடந்தாண்டு கட்சி ஆரம்பித்தாலும், வீட்டை விட்டு வெளியே வருவதில்லை, ஓர்க் பிரம் ஹோம் அரசியல்வாதி என பல்வேறு விமர்சனங்கள் விஜய் மீது வைக்கப்பட்டது.

இந்த நிலையில், தமிழக பொது தேர்தல் நெருங்குவதால், நேரடியாக மக்களை சந்திப்பது தான் கட்சியின் வளர்ச்சிக்கு உதவும் என்பதை உணர்ந்த விஜய், தற்போது கள அரசியலுக்கு திரும்பி இருக்கிறார். பரந்தூர் விமான நிலைய எதிர்ப்பு போராட்டக் குழுவினரை சந்தித்த நிலையில், அதற்கு பிறகு கோவை ஆலோசனைக் கூட்டம், திண்டுக்கல் சூட்டிங் ஆகியவற்றுக்கு மட்டுமே பொது வெளிக்கு வந்தார். சிவகங்கை அஜித்குமார் காவல் நிலையம் மரணம் தமிழக முழுவதும் பலத்த அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில், விஜய் அஜித் குமாரின் குடும்பத்தினருக்கு நேரில் சென்று ஆறுதல் தெரிவித்தது சமூக வலைதளங்களில் பேசுபொருளானது.

சூட்டோடு சூடாக சென்னையில் பிரமாண்ட ஆர்ப்பாட்டத்தையும் விஜய் நடத்தினார். இந்த நிலையில், கடந்தாண்டு விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெற்ற மாநாடு விஜயின் வட மாவட்ட செல்வாக்கை உயர்த்தி காட்டிய நிலையில், தென் மாவட்டத்திலும் தனது ரசிகர்கள் பலத்தை நிரூபிக்க விஜய் திட்டமிட்டார். அதற்கேற்றார் போல் கடந்த செயற்குழு கூட்டத்தில் மதுரையில் மாநில மாநாடு நடைபெறும் என தீர்மானம்



ராகுல்



சோனியா காந்தி

நிறைவேற்றப் பட்டது. எப்போது நடைபெறும் என்ற எதிர்பார்ப்பு நிலவிய நிலையில், திடீரென இரண்டாவது மாநில மாநாட்டிற்கான பந்தல் கால் நடும் விழா நடைபெற்றது.

சிறிது நேரத்திலேயே ஆகஸ்ட் 25 ஆம் தேதி மாநாடு நடைபெறும் என அறிவித்த தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவரும் நடிகருமான விஜய். விழுப்புரம் மாநாட்டை போலவே மிக பிரம்மாண்டமாக, ஏன் அதைவிட அதிக பிரம்மாண்டமாக நடத்த வேண்டும் என்பது விஜய்யின் திட்டம். மாநாட்டுக்கு 20 லட்சம் பேரை திரட்டிவர கட்சி நிர்வாகிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. பிரம்மாண்ட மேடை அமைப்பு, விஜய் நடப்பதற்கு 500 மீட்டர் நீளம் ராம்ப் வாக், பார்க்கிங், உணவு தயாரிப்பு கூடம், மருத்துவ உதவிகள் என ஏற்பாடுகளை சிறப்பாக செய்ய நிர்வாகிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இப்படியான பரபரப்பான நிலையில் தி.மு.க கூட்டணியில் இருக்கும் காங்கிரஸ் கட்சியில் திடீரென ஆட்சி அதிகாரத்தில் பங்கு, அதிக இடங்களில் போட்டியிடத்திட்டம் என புகைச்சல் ஆரம்பித்துள்ளது. தி.மு.க தனித்து நின்னு என்றைக்காவது ஆட்சியை பிடிச்சிருக்கா ?

நாங்க இல்லனா தி.மு.கவுக்கு ஆட்சியே இல்ல...! என காங்கிரஸ் மூத்த தலைவர்

திருச்சி வேலுச்சாமியும் தன் பங்கிற்கு பொங்கியிருக்கிறார். தி.மு.கவின் முக்கிய பிரமுகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திருச்சி சிவா காமராஜரை பற்றிப்பேசி விட, முதல்வர் ஸ்டாலினோ கூட்டணிக்குள் குழப்பம் வந்து விடுமோ என பதறிப்போயிருக்கிறார்.

இந்த சூழலில் அவ்வப்போது கூட்டத்தை கூட்டி கழகங்களுக்கும், பி.ஜே.பிக்கும் பேதி தரும் த. வெ.க. தலைவர் விஜய் வரும் ஆகஸ்ட் 25 ம் தேதி மதுரை அருப்புக்கோட்டை ரோட்டில் உள்ள பாரப்பத்தி கிராமத்தில் 506 ஏக்கர் பரப்பளவில் மாநாடு நடத்தவிருக்கிறார். விஜய் தனது கொள்கை எதிரியாக பி.ஜே. பியை கருதுவதால் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள காங்கிரஸ் விரும்புகிறது. அதன் தல ஒருவர், விஜயுடன் கூட்டணி சேர விரும்பும் பொருட்டு விஜயை ரகசியமாக சந்தித்துள்ளார் என்றும், விரைவில் கூட்டணி விஷயமாக விஜய். ராகுல் சந்திப்பு நிகழும் என்றும் பேச்சு கிளம்பியிருக்கிறது. (அந்த தலைக்கும் தி.மு.க கூட்டணியில் உள்ள திருமாவளவனுக்கும் ஆகாது என்பது வேறு விஷயம்)

தி.மு.க.விடமிருந்து விலகி விஜய் கட்சியுடன் இணைந்து தேர்தலைச் சந்திப்பதற்காக திட்டமிடும் அந்த தலை, விஜயின் நெருங்கிய பெரியண்ணாவின் மனைவியும், தே.மு.தி.கவின் தலைவியுமான பிரேமலதாவையும் கூட்டணியில் சேர்த்து வலுவான மூன்றாவது அணியமைக்க முற்படுகிறார்.

இதற்கு மேலும் வலுவேற்றும் விதத்தில் அந்த தலை பா.ம.க நிறுவனர் மருத்துவர் ராமதாஸையும் சந்தித்து கூட்டணி குறித்து விவாதித்திருக்கிறார். இந்த சந்திப்புக்களும் திட்டங்களும் பலித்தால் விரைவில் காங்கிரஸ் த.வெ.க, தே.மு.தி.க, ராமதாஸின் பெரிய பா.ம.க. என புதுக்கூட்டணி அமையும் என சென்னையில் பேச்சிருக்கிறது.

இந்த புதிய தகவல் பற்றி நாம் மூத்த பத்திரிகையாளர் ஒருவரிடம் பேசிய போது, அவர் நம்மிடம், தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தொடர்ந்து வென்று வரும் ஸ்ரீபெரும்புதூரிலேயே இம்முறையும் போட்டியிட எண்ணிய வேளையில், தி.மு.கவினர் மு.க.ஸ்டாலினுடனான நேர்காணலில், பலர் இம்முறை தி.மு.க கோட்டையான ஸ்ரீபெரும்புதூரில் தி.மு.கவே போட்டியிட வேண்டுமென்றும், 2 சதவீத வாக்குகளையே வைத்திருக்கும் காங்கிரஸை டாமினேட் செய்யவிடக்கூடாதென்றும் கேட்டுக்கொண்டுள்ளனர். ஆனால் தி.மு.க இம்முறை செல்வப்பெருந்தகையை எழும்பூர் தொகுதிக்கு மாற்றி விட முடிவு செய்திருக்கிறது.

இதனிடையே முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் மனைவி துர்காஸ்டாலின் எழுதிய அவரும் நானும் எனும் புத்தக வெளியீட்டிற்கு காங்கிரஸ் தலைவி சோனியாவையும், மகள் பிரியங்காவையும் அழைத்திருக்கிறார். ஆனால், சில காரணங்களால் அவ்விழாவிற்கு வருவதை தட்டிக்கழித்தனர்.

தி.மு.க இல்லாவிட்டால் அ.தி.மு.க, அ.தி.மு.க இல்லாவிட்டால் தி.மு.க என்றிருந்த காங்கிரஸிற்கு, இப்போது விஜய்யின் த.வெ.க. இன்னொரு ஆப்ஷனாக இருப்பதால், விஜயுடன் திடீர் காதல் ஏற்பட்டிருக்கிறது.


விரைவில் ராகுல்காந்தி விஜய் சந்திப்பிற்கும் ஏற்பாடுகள் நடப்பதால், வரும் ஆகஸ்ட் 25 மாநாட்டிற்கு முன்பே தி.மு.க கூட்டணியில் சலசலப்புகள் ஏற்படலாம். இதையே தேர்தல் ஆயுதமாக பயன்படுத்தி சீட் டிமாண்ட்ஸை அதிகரிக்கலாம். கேட்கும் தொகுதிகளை வாங்கி எண்ணிக்கையையும் அதிகளவில் பெறலாம் என காய்நகர்த்துகின்றனர் காங்கிரஸார்.


மு.க.ஸ்டாலின்


துர்கா ஸ்டாலின்


திருச்சி சிவா


திருச்சி வேலுச்சாமி



இதனால் தமிழகத்தில் எந்தக்கட்சியும் பவராக இருக்கக்கூடாதென்ற டெல்லியின் அசைன்மெண்ட், பல்வேறு வடிவங்களில் அரங்கேறி வருகிறது என்றார்.

தி.மு.கவை விட்டு காங்கிரஸும், பி.ஜே.பியை விட்டு எடப்பாடியும் வரும் காலத்தில் பிரிந்தால், அ.தி.மு.க ,காங்கிரஸ், த.வெ.க, தே.மு.தி.க எனும் புதிய கூட்டணி அமைவதில் ஆச்சர்யம் ஏற்பட வாய்ப்பில்லை. இதில் மேலும் சில சாதிக்கட்சிகளும் சேரலாம் என்பதால்தான் பா.ம.க நிறுவனர் ராமதாஸை சந்தித்திருக்கிறார் செல்வப்பெருந்தகை.

நெருப்பில்லாமல் புகையுமா? ■



பிரதமர் மோடியுடன்
எடப்பாடி பழனிசாமி



'அலெர்ட்' ஆறுமுகம்

# நழுவிய மோடி... திணறும் எடப்பாடி..!

**ஏமாளி இல்ல... கோமாளி... என்கின்ற ரேஞ்சுக்கு எடப்பாடி தரப்புக்கு இடி மேல் இடி இறக்கி ஆட்டத்தை ஆரம்பித்து இருக்கிறது அமித்ஷா அண்ட் கோ எனச் சொல்லிக் கொண்டே அதிரிபுதிரியாக அலுவலகத்துக்குள் என்ட்ரியானார் அலெர்ட் ஆறுமுகம்.**

மழையும், வெயிலுமாக மாறி மாறி வானிலை நிலவுவதால் அலெர்ட்டாரின் ஆரோக்கியம் கருதி விளாம்பழ ஜூஸை நீட்டினோம். ஜன்னலை நோக்கி கருமேகங்கள் சூழ்ந்ததை கவனித்துக் கொண்டே ஜூஸை பருகிக்கொண்டிருந்த அலெர்ட்டாரிடம்,

பா.ஜ.கவுக்கு ஆட்சியில் பங்கு கொடுக்க அ.தி.மு.க ஒன்றும் ஏமாளி அல்ல.. கூட்டணி வேண்டும் என்றால் வேண்டும்.. வேண்டாம் என்றால் வேண்டாம்.. அதைப்பற்றி கவலையில்லை என்று நேரடியாககே கொதிக்க ஆரம்பித்து விட்டாரே எடப்பாடி. அவரது இந்த பேச்சு பா.ஜ.க மேலிடத்தை உசுப்பேற்றி இருப்பதாகவும் சொல்கிறார்களே... என்று கிளறினோம்.

தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயக கூட்டணி தலைவர் ஈ.பி.எஸ் தான். ஆனால், தமிழக முதல்வராக அ.தி.மு.கவில் ஒருவர்தான் வருவார் என்று கூறி வருகிறார் அமித்ஷா. அந்த வார்த்தை ஆபத்தான வார்த்தை. இதனை அ.தி.மு.கவினர் சாதாரணமாக கடந்து போக முடியாது. அமித்ஷா ஆயிரம் சொல்லட்டும். இங்கு அ.தி.மு.க தலைமையிலான கூட்டணிதான். இந்த கட்சியின் பொதுச் செயலாளர் நான்தான் முதலமைச்சர் வேட்பாளர் என்று முன்பிருந்தே அடித்துச் சொல்லி இருந்தால் பா.ஜ.க வாலாட்டிக் கொண்டிருக்காது. இதற்கெல்லாம் காரணம் பா.ஜ.கவை எதிர்க்கிறது துணிச்சல் எடப்பாடிக்கு இல்லை. இனிமேலும் அந்தத் துணிச்சல் வராது. தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இப்போதாவது துணிச்சல் வரவேண்டும். இல்லையென்றால் துணிச்சல் இருப்பதாக நடித்தாவது சில விஷயங்களை அவர் பேச வேண்டும்.

இதையெல்லாம் செய்யாமல் அவர் விரைவில் நடத்தப்போகும் போகும் சுற்று பயணத்தால் மக்களிடம் எந்த பயனும் ஏற்படப் போவதில்லை. அ.தி.மு.க, பா.ஜ.க கூட்டணி தேர்தல் வரை நீடிக்குமா? என்கிற

# தி.மு.க. கூட்டணியை உடைக்கும் பா.ஜ.க..!

சந்தேகம் இருக்கிறது. அடுத்து கூட்டணியில் பா.ஜ.கவுக்கு பங்கு என எடப்பாடியை வெறுப்பேற்றி வருகிறது பா.ஜ.க. இப்படி நடந்து கொள்வதால் பா.ஜ.கவுக்குத்தான் முதல் பதிப்பு.

பெரும் முயற்சிக்கு பிறகு பா.ஜ.க அ.தி.மு.க இடையே அமைந்திருக்கும் கூட்டணியை, பலமான அணியாக உருவகப்படுத்தி ராஜ கம்பீரமாக காட்ட வேண்டிய நேரத்தில், சோம்பலான சூழலை பா.ஜ.க ஏன் உருவாக்குகிறது? என தமிழக பா.ஜ.கவினரே குழப்பத்தில் உள்ளார்கள் என புருவம் சுருக்கிய அலெர்ட்டாரிடம் இதை சமாளிக்க எடப்பாடியார் எடுத்த அஸ்திரமும் வீணாகி விட்டதாகச் சொல்கிறார்களே... என்றோம்.

பிரதமர் மோடி தமிழகம் வரும்போது முதல்வர் வேட்பாளர் எடப்பாடி பழனிச்சாமிதான் என அறிவிப்பார் எனக்கூறி வந்தனர் அ.தி.மு.கவினர். நிர்மலா சீதாராமன் மூலமாக எடுத்துச்சொல்லி, எடப்பாடி பழனிச்சாமி தரப்பு முயற்சித்து எடுத்தனர். மோடியே சொல்லிவிட்டால் அமித்ஷா சொல்லி வருவது முடிவுக்கு வரும் என நினைத்தனர். எடப்பாடிதான் முதல்வர் வேட்பாளர் என மோடி மூலம் சொல்ல வைத்து, அமித்ஷாவுக்கு செக் வைக்க திட்டமிட்டனர்.

ஆனால், 26ம் தேதி திருச்சியில் மோடியை சந்தித்த எடப்பாடி இது குறித்து பேசி இருக்கிறார். அதை கண்டு கொள்ளாத மோடி, தேர்தல் நெருங்கும்போது இது குறித்து பேசலாம் என மோடி சொல்ல, அப்செட்டில் இருக்கிறார் எடப்பாடி என்ற அலெர்ட்டாரிடம் '

தி.மு.க கூட்டணியை உடைக்கப்போவதாகவும், இதுகுறித்து ஸ்டாலினுக்கு உளவுத்துறை ரிப்போர்ட் வந்துள்ளதாகவும் தகவல் கசிகிறதே... என அடுத்த டாபிக்கிற்கு மாற்றினோம்.

துரை வைகோவை மத்திய அமைச்சராக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார் வைகோ. அதற்காக சந்திரபாபு நாயுடு விரித்த வலையில் வைகோ விழுந்துவிட்டதாகக் கூறுகிறார்கள். பா.ஜ.க கூட்டணிக்கு செல்வதற்கு முயற்சித்து வருவதாக அடித்துக் கூறுகிறார்கள். வெங்கையா நாயுடு, சந்திரபாபு நாயுடு மூலம் ம.தி.மு.கவை வளைப்பதற்கு பேச்சுவார்த்தை நடந்து வருவதாகவும் கூறப்படுகிறது. சந்திரபாபு நாயுடுவை அவரது வீட்டிற்கு சென்று சந்தித்து வருவதாகவும், அந்த வகையில் ஹைதராபாத்தில் உள்ள சந்திரபாபு நாயுடு வீட்டிற்கு சென்று ம.தி.மு.கவை பா.ஜ.க கூட்டணியில் இணைக்கும் பேச்சு வார்த்தையை துரை வைகோ நடத்தியதாகவும், அவருக்கு மத்திய அமைச்சர் பதவி கொடுக்க பா.ஜ.க தூண்டில் போட்டு வருவதாகவும் முதலில் ஸ்டாலினுக்கு உளவுத்துறை ரிப்போர்ட் கொடுத்துள்ளதாக கூறப்படுகிறது எனச் சொல்லிக் கொண்டே ரிமோட்டை எடுத்து டிவி சேனலை மாற்றினார் அலெர்ட்டார்.



தயாநிதி மாறன்



கலாநிதி

சன் மியூசிக்கில் அண்ணனென்ன தம்பியென்னடா... பாடல் ஒலித்தது.

டக்கென பொறிதட்டி பிரளயம் கிளப்பும் என பலரும் காத்திருந்த கேடி பிரதர்ஸின் பஞ்சாயத்து முடிக்கப்பட்டு விட்டதாக சொல்லப்படுகிறதே எனக் கிளறினோம். டைமிங்கான கேள்விதான்... என நம் தலையில் செல்லமாக குட்டு வைத்தபடி தகவலை கொட்டினார் அலெட்டார்.

தமிழ்நாட்டில் நம்பர் ஒன் சாம்ராஜ்யத்தை நடத்தி வருகிறது

சன் டிவி. இதற்கு ஆரம்பம் முதலே கலாநிதி மாறனுக்கு அனைத்து வழிகளிலும் மிக உறுதுணையாகவும், தூணாகவும் இருந்து வந்தவர் அவரது தம்பி தயாநிதிமாறன்தான். சுமங்கலி கேபிள் விஷன் மூலம்தான் கலாநிதிக்கு வருமானம் கொட்டியது. கேடி பிரதர்ஸின் ராஜ்யத்திற்கு வேராக இருந்தது எஸ்.சி.வி. தமிழகத்தில் யார் சேனல் ஆரம்பித்தாலும் எஸ்.சி.வி மூலம்தான் வீடுகளுக்கு சேனல் நுழைய முடியும். அப்போது அந்தநிலைதான் இருந்து வந்தது. சன் டிவி நம்பர் ஒன் இடத்தைப் பிடித்ததற்கும், கோலோச்சுவதற்கும் இதுதான் முக்கிய காரணம். மற்றவர்கள் சேனல் ஆரம்பித்தால் அவர்களை மிரட்டி பணம் பிடித்து வந்தார்கள். கேடி பிரதர்ஸுற்கு கெட்ட பெயர் வந்ததும், மிகப்பெரிய கோடீஸ்வரர் ஆனதும் இந்த கேபிள் மூலம்தான்.



கி.வீரமணி



மு.க.ஸ்டாலின்

இப்போது கலாநிதி மாறனின் சொத்து மதிப்பு 50 ஆயிரம் கோடிக்கும் மேல் இருக்கும் என்கிறார்கள். கலாநிதி மாறன் மிகப்பெரிய தொழில் சாம்ராஜ்யம் நடத்துவதற்கும், சன் டிவி நம்பர் ஒன் ஆனதற்கும் நான்தான் முக்கிய காரணம். எனக்கும் பங்கு இருக்கிறது என தயாநிதி மாறன் பங்கு கேட்க ஆரம்பித்தார். இந்த விவகாரம் 2000 ம் ஆண்டிலேயே ஆரம்பித்து விட்டது. அப்போது முதல் செலவுக்கு ஏதாவது தருகிறோம் என்று சொல்லி சமாளித்து வந்தார் கலாநிதி. அதற்கெல்லாம் ஒத்துக்கொள்ளாமல் மறுத்து வந்தார் தயாநிதி. அண்ணனோ பிடிகொடுக்கவில்லை. ஒரு கட்டத்தில் பொறுமையிழந்த தயாநிதி பெரும் தொகை கேட்டு கலாநிதி மாறன் மீது வழக்கு தொடுத்தார். அத்தோடு சட்டத்தை மீறி வசூல் செய்துள்ளதாகவும் 2003ல் கலாநிதி மாறன் மீது குற்றம் சாட்டினார். ரூபாய் 50, 100 கோடியாவது கொடுத்து தயாநிதியை கழட்டி விடலாம் என கலாநிதி முடிவு செய்தார். தம்பி பிடிகொடுக்கவில்லை.

கலாநிதிக்கு எவ்வளவு சொத்து இருக்கிறது. எப்படி வந்தது எல்லாம் தெரியும் என்பதால் தயாநிதி பிடிகொடுக்கவில்லை. இந்த வழக்கு இழுத்துக் கொண்டே போனது. ஒரு கட்டத்தில் வெறுப்பான தயாநிதி, கலாநிதி சட்டத்திற்கு புறம்பாக சம்பாதித்ததாக பரபரப்பு குற்றச்சாட்டை முன் வைத்தார். இந்த விவகாரம் தி.மு.கவை பாதிக்கும் என்பதால், ஸ்டாலின் களத்தில் இறங்கி பஞ்சாயத்து செய்ய முயற்சித்து பார்த்தார். அடுத்த ஆண்டு தேர்தல் வரும் நேரத்தில், பா.ஜ.க இந்த விவகாரத்தில் பழைய பிரச்சினைகளை கிளப்பி பூதாகரமாக்கி ஏதாவது சிக்கலை உருவாக்கி விடக்கூடாது என பயந்த முதல்வர் மு.க ஸ்டாலினே களத்தில் இறங்கி சரி செய்ய முயற்சித்தார். ஆனால், கேடி பிரதர்ஸ் இடையே மு.க.ஸ்டாலின் பேச்சு வார்த்தை எடுபடவில்லை.

இறுதியில் திராவிட கழகத் தலைவர் கி,வீரமணி, இந்து என்.ராம் ஆகியோர் பஞ்சாயத்து கோதாவில் இறங்கினர். இந்து என்.ராம், கலாநிதி மாறனின் மனைவி காவிரியின் உறவினர். இவர்கள் தலையிட்டதால் இப்போது கேடி பிரதர்ஸ் பஞ்சாயத்து சுமூகமான சூழலுக்கு வந்துள்ளது. பஞ்சாயத்தின் ஆரம்பத்தில் 100 கோடியில் ஆரம்பித்து 500 கோடி ரூபாய் வரை தர கலாநிதிமாறன் ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால், அதை ஏற்றுக்கொள்ள மறுத்திருக்கிறார் தயாநிதி. குறைந்தது ஆயிரத்து 500 கோடியாவது தரவேண்டும். 50 ஆயிரம் கோடி சொத்து வைத்திருக்கிறீர்கள். சுமங்கலி கேபிளில் நான்தான் தூண். ஆகையால் ஆயிரத் 500 கோடியாவது தர வேண்டும். அதற்கு குறைவாக வாங்க முடியாது என தயாநிதி அடம் பிடித்துள்ளார். இறுதியில் 800 கோடி பணமும், சென்னையின் விலையுயர்ந்த பகுதியான போட் கிளப் ஏரியாவில் 200 கோடி மதிப்புள்ள நிலத்தையும் தயாநிதிக்கு கொடுப்பதாக கலாநிதி மாறன் முடிவுக்கு வந்துள்ளார். இதனால் இந்த பஞ்சாயத்து சுமூகமாக முடிவுக்கு வந்திருக்கிறது எனச் சொல்லி மேகம் கருக்குது... மழை வரப்பார்க்குது எனப் பாடிக்கொண்டே நடையைக் கட்டினார் அலெர்ட்டார். ■

பொள்ளாச்சி | ஜேம்ஸ்

# நெடுஞ்சாலை துறை அதிகாரியின், கமிஷன்... கலெக்சன்... கரப்ஷன்...

## புலம்பும் ஒப்பந்ததாரர்கள்

**கோவை மாவட்டம் பொள்ளாச்சி நெடுஞ்சாலை துறையில் ஏ.இ யாக இருப்பவர் அருண் கார்த்தி. பார்ப்பதற்கு பால் மனம்மாறா பாலகனைப் போல் இருக்கும் இவர், கமிஷன் மற்றும் லஞ்ச விஷயத்தில் நம்பர் ஒன் ஜாம்பவானாக வலம் வந்து கொண்டிருக்கிறாராம்.**

பொள்ளாச்சி நெடுஞ்சாலை துறை அலுவலகம் இதுவரை கண்டதில்லை இப்படி ஒரு அதிகாரியை என்று சொல்லும் அளவிற்கு அலுவலக ஊழியர்கள் அருண் கார்த்தி மீது ஏகக் கடுப்புடன் உள்ளதாக கூறப்படுகிறது.லட்சக்கணக்கில் வருமானம் பார்க்கும் இவர் எச்சில் கையில் கூட காக்கா விரட்டாத ரகமாம். தனக்கு கீழ் நேரம் காலம் பார்க்காமல் வேலை பார்க்கும் ஆர்.ஐ க்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் என்று யாருக்கும் ஒரு நயா பைசா கூட கொடுக்காமல் அனைத்தையும் தானே விழுங்கி ஏப்பம் விட்டு விடும் அருண் கார்த்தி, போடாத பல்வேறு கிராம சாலைகள் போடப்பட்டதாக கணக்கு காட்டியும் கல்லா கட்டியுள்ளாராம். உயரதிகாரிகளை சிவாஜி கணேசனை மிஞ்சுகின்ற தனது அபார நடிப்பால் கைக்குள் போட்டுக் கொண்டு, இஷ்டத்துக்கு வாரிக் குவித்து கொண்டிருக்கும் இவர், தன் சொந்த ஊரில் பங்களா அளவில் மூன்று வீடுகள் கட்டியுள்ளார் என்கின்றனர் விபரம் அறிந்தவர்கள்.

ஒப்பந்ததாரர்கள் செய்யும் பணிகளை ஒப்புக்கு ஆய்வு செய்யும் இவர், திருவிளையாடல் திரைப்படத்தில் நாகேஷ் தனது பாட்டில் எவ்வளவு பிழை இருக்கிறதோ அந்த அளவிற்கு பரிசு தொகையில் பிடித்தம் செய்து கொள்ள கூறுவது போல, பணிகள் எவ்வளவு தரமில்லாமல் இருக்கிறதோ அந்த அளவிற்கு கமிஷனை அதிகரித்து வசூல் செய்து விடுவதில் கில்லாடியான அருண் கார்த்தி, எவ்வளவு வருமானம் வந்தாலும் போதாத குணம் கொண்டவராக தொகுப்பு ஊதியத்தில் (NMR) பணி புரிபவர்களின் ஊதியத்திலும் கை வைப்பது தான் உச்சகட்ட கொடுமை என்று கண்ணீர் வடிக்கின்றனர் பணியாளர்கள்.

அதாவது, பிரதி மாதம் மூன்றாம் தேதிக்குள் வந்து விடும் மேற்படி தொகுப்பு ஊதியப் பணியாளர்களின் சம்பளத்தை, ஒரு சில பெரிய ஒப்பந்ததாரர்களுடன் மறைமுக ஒப்பந்தம் போட்டு கொண்டு அந்த பணத்தை ரொட்டேஷன செய்து, அதிலிருந்தும் ஒரு

குண்டும் குழியுமாக சாலைகள்...












எ.வ.வேலு

வருமானம் பார்த்து விட்டு (நாள் வட்டி, மீட்டர் வட்டி, ஸ்பீடு வட்டி என்று கொடுத்து வாங்குவாரோ என்னவோ.?) பிறகு 10 ஆம் தேதியிலிருந்து 15ஆம் தேதி வாக்கில் தான் அவர்களுக்கு சம்பளத்தை கொடுப்பாராம். அதுவும் நாள் ஒன்றுக்கு 700 முதல் ஆயிரத்து 500 வரை சம்பளமாக கணக்கிடப்படும் ஊழியர்களுக்கு மாதம் 13 ஆயிரம் என்கிற அளவில் தான் கொடுக்கப்படுகிறதாம். மேலும் வாரிக் கொடுக்கும் ஒப்பந்ததாரர்களிடம் வளைந்து, குழைந்து நடந்து கொள்வதுடன், அப்படிப்பட்டவர்களுக்கே பணிகளை கொடுக்கும் அருண் கார்த்தி, நிர்ணயிக்கப்பட்ட கமிஷனை மட்டும் தந்து விட்டு தரமாக வேலை செய்யும் ஒப்பந்ததாரர்களிடம் கடுமையாக நடந்து கொள்வார் என்பதால், ஒரு சில நேர்மையான ஒப்பந்ததாரர்கள் இவர் உள்ளவரை பொள்ளாச்சி நெடுஞ்சாலை துறையில் பணிகளே வேண்டாம் என்று ஒதுங்கி உள்ளதாகவும் கூறுகின்றனர் விபரமறிந்தவர்கள். அதோடு இரவு வேளைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு டீ, டிபன் கூட வாங்கி தராமல், அவரவர் காசில் வாங்கிக் கொள்ளச் சொல்லும் அளவுக்கு மிக கீழ்த்தரமாக நடந்து கொள்வார் என ஏ இ அருண் கார்த்தி மீது அடுக்கடுக்காக புகார் கூறும் அலுவலக வாசிகள் மற்றும் ஒப்பந்ததாரர்கள், அருண் கார்த்தி வந்து மூன்று வருடங்கள் ஆகப் போகிறது, இன்னும் ஏன் போக மறுக்கிறார் என்றும் கேள்வி எழுப்புகின்றனர். (ருசி கண்ட பூனை எப்படி போகும்)

மேலும், பொள்ளாச்சி நெடுஞ்சாலை துறைக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் அருண் கார்த்தி மேற்பார்வையில் செய்யப்பட்ட அனைத்து பணிகளையும் மறு ஆய்வு செய்ய வேண்டும் எனவும், அவர்கள் கோரிக்கை வைக்கின்றனர்.

மேற்படி அருண் கார்த்தியின் மேற்பார்வையில் போடப்பட்ட பல சாலைகள் ஒரு வருடத்திற்குள்ளே பெயர்ந்து மோசமான நிலையில் உள்ளதாகவும், சில சாலைகள் பேட்ச் ஒர்க் மட்டுமே செய்யப்பட்டு அது முழுமையாக போடப்பட்டதாக கணக்கு காண்பிக்கப்பட்டுள்ளது என்றும் கூறும் சமூக ஆர்வலர்கள், அருண் கார்த்தியின் உறவினர்கள் என்று உலா வரும் முகேஷ், கிட்டு, செந்தில் ஆகியோர் மூலம்தான் அருண் கார்த்தியின் கமிஷன், கலெக் ஷன், கரப்ஷன் டீலிங் நடைபெறுவதாகவும், லஞ்சப்பணம் முகேஷின் வங்கி கணக்கு மூலம் பரிமாற்றம் செய்யப்படுவதாகவும் குற்றம்சாட்டுகின்றனர்.

தற்போது வந்துள்ள கோட்ட பொறியாளர் நித்யானந்தம் அருண் கார்த்தி விஷயத்தில் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என்றும், அதைவிட்டு தான் ஏ டி யாக இருக்கும் போது ஒன்றாக பணி புரிந்தார் என்கிற நட்பின் அடிப்படையில் மெத்தனமாக நடந்து கொள்வார் என்றால், பழியை அவரும் சுமக்க வேண்டி வரும் என்பதே அனைவரது ஒட்டுமொத்த கருத்தாகும்.

ஊதுகிற சங்கை ஊதி விட்டோம் உயரதிகாரிகளும், துறை அமைச்சர் ஏ.வ.வேலுவும், அருண் கார்த்தி மீது என்ன நடவடிக்கை எடுக்க போகிறார்கள் என்று பொருத்திருந்து பார்ப்போம். ■



பொள்ளாச்சி

இரா.யுவபாரதி

# பாழடைந்த வீடுகள்... வீட்டுக்குள் காடு...

## வேதனையில் பழங்குடியினர்...

**தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் ஏராளமான பழங்குடியினர் வசித்து வருகின்றனர். வனப்பகுதிக்கு உள்ளேயேயும், வெளியேயும் வசித்து வரும் அவர்களுக்கு புலிகள் காப்பகத்தை காரணம் காட்டி மத்திய, மாநில அரசுகள் ஏராளமான நெருக்கடிகளை கொடுத்து வருவதாக கூறப்படுகிறது.**

வன கிராமங்கள் மட்டுமல்லாமல், பழங்குடியின மக்கள் தங்கியுள்ள வருவாய் கிராமங்களிலும் வீடு, மின்சாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இல்லாத அவலநிலையே இன்றுவரை தொடர்கிறது.

கோவை மாவட்டம் பொள்ளாச்சியை அடுத்த புளியங்கண்டி, அண்ணா நகர் ஆகிய கிராமங்களில் தமிழக அரசு கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்பு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுத்தது. தற்போது அந்த வீடுகள் சிதலமடைந்து, அடிக்கடி சுவர் இடிந்து விழுந்து உயிருக்கு அச்சுறுத்தலாக இருந்து வருகிறதாம். குறிப்பாக மழை காலங்களில் தாங்கள் சந்திக்கும் அவலங்களை வார்த்தைகளால் விவரிக்கவே முடியாது என்கிறார்கள் பழங்குடியின மக்கள்.

இதுகுறித்து விசாரிக்க களமிறங்கினோம். அப்போது, முதலில் வால்பாறை செல்லும் வழியில் ஆழியார் அணை அருகே உள்ள புளியங்கண்டி கிராமத்துக்கு சென்றோம். அங்கு எரவாளர் பழங்குடியின இனத்தைச் சேர்ந்த 40க்கும் மேற்பட்ட குடும்பத்தினர்

வசித்து வருகின்றனர். அவர்கள் வசிக்கும் வீடுகளின் சுவர்கள் ஆங்காங்கே பெயர்ந்தும், எஞ்சியுள்ள சுவர்களில் விரிசல்கள், வெளியே தெரியும் கான்கிரீட் கம்பிகள் என எலும்பு கூடுகளாக காட்சியளிக்கின்றன. வீடுகளுக்குள் வளர்ந்துள்ள மரங்கள் என குடியிருப்பு பகுதிகள் காடுபோல் காட்சியளிக்கிறது.

இது குறித்து நம்மிடம் பேசிய அந்த கிராமத்தை சேர்ந்த அம்சா என்பவர், 50 ஆண்டுகளுக்கு முன்பு ஆழியார் அணை உள்ள பகுதியில் குடியிருந்தோம். அணை கட்டுவதற்காக எங்களை அங்கிருந்து வெளியேற்றினார்கள். இந்தப் பகுதிக்கு குடிவந்து சுமார் 40 ஆண்டுகளாகி விட்டன. மழை காலத்தில் அருவி போல வீட்டுக்குள் தண்ணீர் ஒழுகும். இங்கு நானும், கணவரும் மட்டும் தான் இருக்கிறோம். மேலே இருந்து பூச்சு எப்போது விழும் என்று சொல்ல முடியாது. பல முறை பெயர்ந்து விழுந்துள்ளது. இப்போது நாங்கள் வீட்டுக்குள் தூங்குவது இல்லை. பொருட்களை மட்டும் உள்ளே வைத்து, நாங்கள் வெளியே தான் தூங்கி வருகிறோம். மழை பெய்தால் அரசு அதிகாரிகள் அருகில் உள்ள பள்ளிக்கு அழைத்துச் செல்வார்கள். அதன் பிறகு கண்டு கொள்ள மாட்டார்கள். அரசியல்வாதிகள் ஓட்டு கேட்கும் போது மட்டுமே வருகிறார்கள். மற்ற நேரங்களில் எட்டிக் கூட பார்க்க மாட்டார்கள். நாங்கள் சொல்வதை யாருமே காது கொடுத்து கேட்பதில்லை என்றவர், அரசு பாதுகாப்பான வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்று வேதனையோடு தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து, வேட்டைக்காரன் புதூர் அருகே உள்ள அண்ணா நகர் கிராமத்திற்கு சென்றோம். அக்கிராமத்தில் மலசர் பழங்குடி இனத்தைச் சேர்ந்த 200 க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். அவர்களுக்கும் எந்தவொரு அடிப்படை வசதிகளும் இல்லை என்பதை நம்மால் பார்க்க முடிந்தது.

இது குறித்து அப் பகுதி மக்களிடம் கேட்ட போது, எங்கள் அடிப்படை பிரச்சினைகளுக்காக அரசிடம் போராடி, சோர்வடைந்து பாதி மக்கள் ஊரைவிட்டே சென்று விட்டனர். எங்கள் கிராமத்தில் 100க்கும் மேற்பட்ட மக்களுக்கு வீடு கட்டி கொடுக்க அரசு நிதி ஒதுக்கியும், கட்டுமானப் பணிகள் குறித்து புகார் எழுந்ததால் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் பணிகளை பாதியிலேயே நிறுத்தி சென்று விட்டார். பல வீடுகள் அஸ்திவாரத்துடனும், பல வீடுகள் பாதி கட்டிய நிலையிலும் இருக்கின்றன. சில வீடுகளில், அந்த வீட்டை விட உயரமான மரம், செடிகள் வளர்ந்து புதர் மண்டி கிடக்கின்றன என்று குற்றம்சாட்டினர்.

> **“கர்ப்பிணிகள் முதல் குழந்தைகள் வரை ஏராளமானோர் மீது மேற்கூரை பூச்சு பெயர்ந்து விழுந்து காயமடைந்துள்ளனர். அண்ணா நகர், புளியங்கண்டி கிராமங்களில் மட்டுமே சுமார் 1500க்கும் மேற்பட்ட மக்கள் இருக்கிறார்கள். மழை பெய்யும் போது அருகில் உள்ள பள்ளிகளில் தங்க வைப்பார்கள். அந்த இடத்திலும் அவர்களுக்கு உணவு உள்ளிட்ட வசதிகள் செய்து கொடுப்பதில்லை. அதனால் எங்கள் உயிர் இங்கேயே போகட்டும் என அவர்களும் ஆபத்தான நிலையிலேயே வசித்து வருகிறார்கள்.**

மேலும் தொடர்ந்து பேசிய அவர்கள், எங்களுக்கு சொந்தமான இடம் இல்லாத காரணத்தால், ஆங்காங்கே இடம் பெயர்ந்து நாடோடியாக ஓடிக் கொண்டே இருந்தோம். நீண்ட போராட்டத்துக்குப் பிறகு தான் பட்டா கொடுத்தனர். வீடு கட்டி கொடுப்பதாகவும் அறிவித்தனர். கடந்த 4 ஆண்டுகளாக அந்தப் பணிகளும் முடங்கி விட்டன. கையில் பணம் இருந்த ஒரு சிலர் மட்டும் தங்களின் சொந்த செலவில் வீடு கட்டியுள்ளனர். மின்சாரம், குடிநீர் உள்ளிட்ட எந்த வசதியும் கிடையாது. எங்கள் பகுதியில் இருந்து சற்று கீழே

சென்று தான் குடிநீர் சுமந்து வர வேண்டும். மின்சார வசதி இல்லாததால் குழந்தைகள் படிப்பதற்கு சிரமப்படுகிறார்கள். இங்கிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் அரசு தொடக்கப் பள்ளியும், அதற்கு மேல் படிக்க 12 கிலோமீட்டர் தொலைவு பயணித்து வேட்டைக்காரன் புதூர் பகுதிக்கும் செல்ல வேண்டும். அதற்கு முறையான பேருந்து வசதியும் இல்லை. இதனால் பிள்ளைகள் பதியிலேயே படிப்பை நிறுத்திவிடுகின்றனர். கழிப்பறை வசதியும் இல்லை. ரேசன் கடைக்கு கூட 10 கிலோமீட்டர் செல்ல வேண்டும். 10 கிலோமீட்டர் சுற்றளவில் மருத்துவமனைகளே கிடையாது. இறந்தால் எங்களை புதைப்பதற்கு சரியான சுடுகாடு கூட இல்லை என்று வேதனையுடன் தெரிவித்தனர்.

இது குறித்து நம்மிடம் பேசிய தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கத்தின் கோவை மாவட்ட செயலாளர் பரமசிவம் பழங்குடியின மக்களுக்கு அரசு ஒரு சென்ட் பரப்பளவில் தொகுப்பு வீடு கட்டி கொடுத்துள்ளது. நீண்ட காலமாகி விட்டதால் மேற்கூரை பாதிப்படைந்து கம்பிகள் உருகுலைந்துவிட்டன. கர்ப்பிணிகள் முதல் குழந்தைகள் வரை ஏராளமானோர் மீது மேற்கூரை பூச்சு பெயர்ந்து விழுந்து காயமடைந்துள்ளனர். அண்ணா நகர், புளியங்கண்டி கிராமங்களில் மட்டுமே சுமார் ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட மக்கள் இருக்கிறார்கள். மழை பெய்யும் போது அருகில் உள்ள பள்ளிகளில் தங்க வைப்பார்கள். அந்த இடத்திலும் அவர்களுக்கு உணவு உள்ளிட்ட வசதிகள் செய்து கொடுப்பதில்லை. அதனால் எங்கள் உயிர் இங்கேயே போகட்டும் என அவர்களும் ஆபத்தான நிலையிலேயே வசித்து வருகிறார்கள்.

மறுபக்கம் தம்மம்பதி பகுதியில் சுமார் 200 க்கும் மேற்பட்ட பழங்குடி மக்களுக்கு வீடு கட்டி கொடுப்பதற்கு, அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தில் தலா ரூபாய் 3 லட்சத்து 50 ஆயிரம் நிதி ஒதுக்கப்பட்டது. இதற்கான பணிகளை எடுத்த கான்ட்ராக்ட் நிறுவனம் வீட்டை தரமாக கட்டவில்லை. மக்கள் புகார் எழுப்பியவுடன் பணிகளை அப்படியே நிறுத்தி சென்று விட்டனர். பழங்குடியின மக்கள் மறுவாழ்வு திட்டத்தின் கீழ், தனியார் தோட்டங்களில் இருந்து மறு





இடிந்து விழும் நிலையில் வீடுகள்...

குடியமர்த்தப்பட்ட கிராமங்கள் இவை. இந்த சூழ்நிலையால் சில மக்கள் மீண்டும் தனியார் தோட்டங்களுக்கே சென்று வருகிறார்கள். வீட்டை சீரமைப்பதற்கான பொருளாதாரம் அவர்களிடம் இல்லை. மாற்று வீடு கட்டித் தர பல முறை கோரிக்கை விடுத்தும், போராட்டங்கள் நடத்தியும் நடவடிக்கை இல்லை. உயிர் சேதம் ஏற்படுவதற்கு முன்பு அரசு வீடு கட்டித்தர வேண்டும் என்றார்.

பழங்குடி மக்களின் கோரிக்கையை ஏற்று அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதி செய்து தர தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமா..? எடுக்க வேண்டும் என்பதே அனைவரின் கோரிக்கை. ■

# மோடி v/s ஆர்.எஸ்.எஸ்.

## ● பா.ஜ.க.வே தேவையில்லை...
## ● மோடி பராக்... பராக்...!
## ● மிரட்சியில் ஆர்.எஸ்.எஸ்..!


மோடி

**ஓ.பி.எஸ் தனிக்கட்சி ஆரம்பிக்கப் போகிறாரா.? அண்ணாமலை தனிக்கட்சி ஆரம்பிக்கப்போகிறாரா.? காங்கிரஸின் சசி தரூர் தனிக்கட்சி ஆரம்பிக்கப்போகிறாரா.? என விவாதங்கள் கொழுந்துவிட்டு எரியும் நிலையில், மோடியே தனிக்கட்சி ஆரம்பித்து விடுவார் என்கிற ரேஞ்சுக்கு பா.ஜ.க எம்.பி ஒருவர் பரபரப்பைக் கிளப்பி இருக்கிறார்.**

2014 ஆம் ஆண்டு மோடி தலைமையில் மத்தியில் அரசு அமைக்கப்பட்டதில் இருந்து, பா.ஜ.க அறிவிக்கப்படாத ஒரு பாரம்பரியத்தை வளர்த்துக் கொண்டுள்ளது. அக்கட்சியின் தலைவர்கள் 75 வயதை எட்டிய பிறகு ஓய்வு பெறுவது வழக்கம். இதன் காரணமாகவே பல முன்னாள் எம்.பி.க்கள், கட்சியின் ஆளுநர்களுக்கு டிக்கெட் கிடைக்கவில்லை அல்லது அவர்களின் பதவிக்காலம் நீட்டிக்கப்படவில்லை. அந்த வழக்கத்தை உடைத்து இருக்கிறார் மோடி. பா.ஜ.கவின் சித்தாந்த அமைப்பான ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத், நாக்பூரில் பிரதமர் மோடியின் ஓய்வுடன் தொடர்புடைய ஒரு கருத்தை வெளியிட்டார்.

உங்களுக்கு 75 வயது ஆகும்போது, நீங்கள் இப்போதே நிறுத்தி மற்றவர்களுக்கு வழிவிட வேண்டும் என்று அர்த்தம். 75 வயது முடிந்த பிறகு சால்வையால் கௌரவிக்கப்பட்டால், இப்போதே நிறுத்த வேண்டும். வயதானவர்கள் ஒதுங்கி நில்லுங்கள். மற்றவர்கள் முன்வரட்டும் என சர்ச்சைக்கு பிள்ளையார் சுழி போட்டார். இந்தக் கருத்தின் மூலம் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு மோடி மீது விரலைக் நீட்டுவதாக தேசிய அளவில் பற்றி எரிகிறது. தற்செயலாக, பிரதமர் மோடியும் இந்த ஆண்டு செப்டம்பர் 17 ஆம் தேதி 75 வயதை எட்டப் போகிறார் என்பதுதான் ஹைலைட். மற்றொருபுறம், பகவத்துக்கு இந்த ஆண்டு 75 வயது பூர்த்தி அடைகிறது.

பகவத்தின் இந்தக் கருத்து குறித்து பா.ஜ.கவில் இணைந்த மூத்த ஆர்.எஸ்.எஸ். சிந்தனையாளர் ஒருவர் கூறும்போது, இதனை சுட்டிக்காட்டுவது ஆர்.எஸ்.எஸ்ஸின் வேலை. அவ்வப்போது இந்தப் பொறுப்பை சங்கம் நிறைவேற்றி வருகிறது. பிரதமர் மோடிக்கும் இந்த அறிகுறியை சங்கம் உணர்த்த முயற்சிக்கிறது. பிரதமர் மோடியும் இதில் விதிவிலக்கானவர் அல்ல. சரியான நேரம் வந்துவிட்டதாக அவர் உணர்ந்தால், அவரே பதவி விலக முன் வரலாம். அதேவேளை மோடிக்கு, பகவத்தின் ஆலோசனை தேவையில்லை என்கிறார்.


மோகன் பவகத்

இதுகுறித்து டெல்லி பா.ஜ.க மூத்த தலைவர் ஒருவரிடம் பேசினோம். அவர், நீண்ட நாட்களாக பா.ஜ.கவின் தேசியத் தலைவரை தேர்ந்தெடுப்பதில் பெரிய குளறுபடியே நடந்து கொண்டு இருக்கிறது. பா.ஜ.க தனது கட்சிக்கு தலைவர் இல்லாமல், தலை இல்லா முண்டமாகவே செயல்பட்டு வருகிறது. பா.ஜ.கவில் 15 கோடி உறுப்பினர்கள் இருந்தும் அந்த கட்சியால் பல மாதங்களாக ஒரு தலைவரை தேர்ந்தெடுக்க முடியவில்லை. பா.ஜ.க தலைவரை தேர்ந்தெடுப்பதில் ஆர்.எஸ்.எஸ் அமைப்பே பின்னணியில் செயல்படும். இதுதான் அக்கட்சியின் நடைமுறை.

ஆனால், இந்த நடைமுறையை மோடி அவரது தனிப்பட்ட செல்வாக்கால் முடக்கப் பார்க்கிறார். மோடி, அமித்ஷா, ஜே.பி.நட்டா, ராஜ்நாத் சிங் போன்றவர்கள் எல்லாம் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் பின்னணியில் இருந்து வந்தவர்களே. ஆர்.எஸ்.எஸ் அமைப்பை பொருத்தவரையில் எழுதப்படாத சட்டம் என்னவென்றால் இரண்டு முறைக்கு மேல் பிரதமராகவோ, அதிகாரப் பதவியிலோ இருக்க கூடாது. 25 வயதிற்கு உடப்பட்டவர்கள் எந்த அரசு பதவிகளையும் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பதுதான்.

ஆனால், மோடி பிரதமரான பின்னர் தனது செல்வாக்கை தன்னிச்சையாக உயர்த்தி வருகிறார். அப்போது முதல் குஜராத்திகளின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது. இதற்கு அமித் ஷாவையும், மோடி கூடவே வைத்துக் கொள்கிறார் என்பதை உணர்ந்து கொண்ட ஆர்.எஸ்.எஸ் தலைவர்கள் பெரும் ஆத்திரம் அடைந்தனர். இரண்டு முறை பிரதமர் பதவி வகித்த மோடியை மூன்றாவது முறை தூக்கி விட வேண்டும் என ஆர்.எஸ்.எஸ் கங்கணம் கட்டிக் கொண்டு இருந்தது. ஆனால், ஆர்.எஸ்.எஸ் பின்னணியில் இருந்து வந்த பா.ஜ.க தேசிய தலைவர் ஜே.பி.நட்டாவை மத்திய அமைச்சராக்கி விட்டார் மோடி. பா.ஜ.க தலைவர் பதவிக்கு மோடியே மற்றொருவரை தேர்வு செய்வதை ஆர்.எஸ். எஸ் விரும்பவில்லை. இது மோடிக்கும், ஆர்.எஸ்.எஸுக்கும் இடையே பிரச்சனையை உருவாக்கியது. ஆகையால், மோடியை பிரதமர் பதவியை விட்டு கிளப்ப வேண்டும் என ஆர்.எஸ்.எஸ் சில காலமாக திட்டம் தீட்டி வந்தது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு



அமித்ஷா



நிதின்கட்கரி

முன்பு ஹைதராபாத்தில் கூடிய ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் காரியக் கமிட்டி கூட்டத்தில் ரகசியமாக ஒரு திட்டம் போடப்பட்டது. அந்தக் கூட்டத்தில் அடுத்த முறை மோடி பிரதமராகக் கூடாது என சங்கம் ரகசிய முடிவு எடுத்தது. அப்போது அடுத்த பிரதமராக யாரை போடலாம் என விவாதித்தபோது ராஜ்நாத் சிங், மகாராஷ்டிராவை சேர்ந்த மத்திய அமைச்சர் நிதின் கட்கரி, யோகி ஆதித்யா நாத், ஜே.பி.நட்டா பெயர்களும் அடிபட்டது. இது மோடிக்கு தெரிய வர, எனக்கே விபூதி அடிக்கப் பார்க்கிறீர்களா.?என காய்களை நகர்த்திய மோடி, ஆர்.எஸ்.எஸின் அடுத்த பிரதமர் பட்டியலில் முதலிடத்தில் இருந்த நிதின் கட்கரியின் நெடுஞ்சாலை போக்குவரத்து துறையில் ஊழல் நடப்பதாகக் கூறி அவரது பெயரை கெடுத்து விட்டார்.

அடுத்து, யோகி ஆதித்யா நாத்தின் செல்வாக்கையும் காலி செய்து விட்டார். அதன் பிறகு நாடாளுமன்றத் தேர்தல் வந்தது. எப்போதும் பா.ஜ.கவின் பார்முலா என்னவென்றால் பதவியில் இருப்பவரை வெளியேற்ற மாட்டார்கள். மக்களைச் சந்திக்க வைத்து தேர்தலை எதிர்கொண்டு வெற்றிபெற்ற பிறகே பதவியில் இருந்து வெளியேற்றிவிட்டு விடுவார்கள். மோடியையும் கடந்த முறை அப்படி செய்து விடலாம் என கணக்கு போட்டது ஆர்.எஸ். எஸ். ஆனால், மோடி ஆர்.எஸ். எஸ் ன் திட்டத்தைக் கொண்டே காரியம் சாதித்துக் கொண்டார்.

ஜே.பி.நட்டாவை வைத்தே தன்னை பிரதமர் என அறிவிக்க வைத்தார் மோடி. இதனை சற்றும் எதிர்பாராத ஆர்.எஸ்.எஸ் தலைவர்களுக்கு அதிர்ச்சியே மிஞ்சியது. அடுத்த கட்டமாக மோடி, ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் உள்ள தனக்கு எதிரானவர்களை



நிர்லா சீதாராமன்



யோகி ஆதித்யநாத்



ஜே.பி.நட்டா

ஒழித்துக் கட்டும் முயற்சிகளையும் மேற்கொண்டார். மோடியின் செல்வாக்கால் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் முக்கிய தலைவர்களே அச்சம் கொண்டனர். ராணுவம், ஆட்சி அதிகாரம், கட்டமைப்பு என எல்லாமும் மோடியின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அவர் நினைத்தால் மோகன் பகவத்தின் பதவியை பிடுங்கி வீட்டுக்கு அனுப்பி வைக்கக் கூடிய நிலை ஏற்பட்டது. இதனால் மோகன் பகவத் பின் வாங்கினார். ஆர்.எஸ்.எஸ் மோடிக்கு எதிரான இந்தப் போர் நடந்து விடக்கூடாது என ஆர்.எஸ்.எஸ் தலைவர்கள் கவலை கொண்டனர். இந்நிலையில் அமித்ஷாவை, ஆர்.எஸ்.எஸ் தலைவர்கள் ரகசியமாக அழைத்து பேசியதாகவும் டெல்லி மட்டத்தில் பேச்சு அடிபட்டது. ஆனால், அமித் ஷா அதனை ஏற்றுக் கொள்ளத் துளியும் வாய்ப்பில்லை என்பது அவர்களுக்கே தெரியும். ஏனென்றால் மோடியின் தீவிர ஆதரவாளர்தான் அமித்ஷா. மோடி இல்லை என்றால் அமித்ஷா இல்லை. அமித்ஷா இல்லை என்றால் மோடி இல்லை. மிக நெருங்கிய குஜராத்திகளை வாழ வைப்பவர்கள்தான் மோடியும், அமித்ஷாவும். இருவரையும் பிரிப்பது என்பது கண்ணை விட்டு இமையை பிரிப்பது போன்றது. அது நடக்கவே நடக்காது. அதையும் மீறி பிரதமர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்றால் அமித்ஷாவை பிரதமராக்கிவிட்டு தன்னை ஜனாதிபதி ஆக்கிவிட வேண்டும் என க்கூறி வந்தார் மோடி. அரசு அதிகாரம் இருந்தால் மட்டும்தான் குஜராத்திகளை காப்பாற்ற முடியும் என்பது அவரது கணக்கு. அதேபோல பா.ஜ.கவின் தலைவர் பதவிக்கு அமர்த்த தனக்கான அடிமையை தேடுகிறார் மோடி. அவரது முதல் தேர்வாக நிர்மலா சீதாராமன் இருக்கிறார். நடிகை கங்கனா ரணவத் பெயரும்கூட பா.ஜ.க தலைவர் பதவிக்கு அடிபட்டது. ஆனால் பா.ஜ.க தலைவர் பதவியை நிர்வகிக்க முடியாது என கங்கனா ஒதுங்கிவிட்டார்.

மோடி, தான் இருக்கிற வரை அதிகாரத்தில் இருக்க வேண்டும் என விரும்புகிறார். பதவி இல்லாமல் போவதை அவரால் யோசித்து பார்க்கக்கூட முடியவில்லை. பதவியை எதிர்க்கும் ஆர்.எஸ்.எஸ் காரர்களை மட்டுமே மோடி எதிர்க்கிறாரே தவிர ஆர்.எஸ்.எஸ் கொள்கைகளை அவர் எதிர்க்கவில்லை. மோடி எப்போதும் ஆர்.எஸ்.எஸ் பற்றுடையவர்தான் என்கிறார் அந்த மூத்த நிர்வாகி.

மோடி ஆர்.எஸ்.எஸ் மோதல் விவகாரம் சில நாட்களாக வெடித்துக் கிளம்பி வந்தாலும் ஓய்ந்தபாடில்லை. இப்போது, பா.ஜ.க எம்.பி நிஷிகாந்த் துபே, பா.ஜ.கவுக்கு மோடி தேவை. ஆனால், மோடிக்கு பா.ஜ.க தேவை இல்லை. எங்கே இருந்தாலும் அவர்தான் தலைவர். இன்னும் 15, 20 வருடங்களுக்கு பா.ஜ.கவின் முகம் என்றால் அது மோடி மட்டுமே. அவர் இல்லை என்றால் 150 சீட்டுக்கும் குறைவாகத்தான் பா.ஜ.கவால் வெற்றி பெற முடியும். அதுவும்கூட பா.ஜ.கவுக்கு கஷ்டம்தான். யோகி ஆதித்யாநாத்துக்கு இப்போது டெல்லியில் வேலையே கிடையாது என மேலும் பற்றவைத்து இருக்கிறார். அவரது இந்தப்பேச்சு ஆர்.எஸ்.எஸ் ஐ வெளிப்படையாகவே எதிர்க்கிறாரா மோடி? என்கிற பெரும் பிரளயத்தை கிளப்பி இருக்கிறது.

கடந்த 25 ஆண்டுகளில், மோடி தோல்வியையே சந்திக்காத நபராக இருந்து வருகிறார். அவரது ஆட்சியில் நிர்வாகத் தோல்வி என்பது வேறு. முதல்வர், பிரதமர் என தொடர்ந்து கால் நூற்றாண்டாக அதிகாரத்தை ருசித்து வருகிறார். அந்த அதிகாரம் திடீரென இல்லாமல் போய்விட்டால் தனது நிலை என்னவாக இருக்கும் என்பதை அவரால் யோசித்துப் பார்க்கக்கூட முடியவில்லை. ஆகவே, மோகன் பகவத் சொல்வதை எல்லாம் இப்போதைக்கு கேட்பதாகவும் மோடி இல்லை. ■

திருப்பத்தூர்

மணிகண்டன்

# கைநீட்டிய டி.எஸ்.பி.., ஓய்வு பெறும் நாளில் சஸ்பெண்டு..!

## கலக்கத்தில் காக்கிகள்

**திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி டி.எஸ்.பி விஜயகுமார் ஓய்வு பெறும் நாளில் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளது போலீசார் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.**




வாணியம்பாடி டி.எஸ்.பி.யாக இருந்தவர் விஜயகுமார். இவர், (ஜூன் 30) அன்று ஓய்வு பெற இருந்த நிலையில், ஜூன் 29 ந் தேதி நள்ளிரவு 12 மணியளவில் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்.

விஜயக்குமார் டி.எஸ்.பியாக, வந்ததிலிருந்து, ஒவ்வொரு புகார் மனதார்களிடமும் தலா ரூபாய் 25 ஆயிரம் விதமும், புகாரில் கூறப்பட்டுள்ள எதிரிகளிடம், லட்சங்கள் வரை லஞ்சங்களாக பெற்றதாக கூறப்படுகிறது.




டி.எஸ்.பி. விஜயகுமார்

லஞ்சம் பெறுவது சர்ச்சையாகமலிருக்க தன் சர்கிளில் இருக்கும் காவல்நிலைய இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர்களையும் கவணிக்க சொல்லிவிடுவாராம்.

இதனால், பொதுமக்கள் கொடுக்கும் புகார் மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்தது குறித்து சமீபத்தில் பல புகார்கள் முதல்வரின் தனி பிரிவுக்கு பறந்துள்ளது. இதனையடுத்து மேலிட உத்தரவின் பேரில் சி.பி.சி.ஐ.டி. போலீசாரின் கண்காணிப்பில் விஜயக்குமார் கொண்டுவரப்பட்டுள்ளார்.

அதனை தொடர்ந்து, 2 தனிப்படை அமைத்து விஜயக்குமார் சொத்து விபரங்கள், அவர் மீது கூறப்பட்ட புகாருக்கான ஆதாரங்கள், கேரளாவில் பல கோடிக்கு அவர் புதிதாக கட்டி வரும் அடுக்குமாடி குடியிருப்பு போன்றவற்றை ஆய்வு செய்து அறிக்கையை தினந்தோரும் டி.ஜி.பி.க்கும், முதல்வருக்கும் அனுப்பி வந்துள்ளனர்.

விஜயக்குமார், தென்காசி மாவட்டம், கடையநல்லூர் சார்பு ஆய்வாளராக பணியில் சேர்ந்தார். அதன்பின் படிப்படியாக ஆய்வாளர், காவல் துணை கண்காணிப்பாளர் என பதவி உயர்வு பெற்று தென்காசி மாவட்டத்திலேயே, அதுவும் ஒரே தாலுகாவிலேயே பணியாற்றி வந்துள்ளார்.

அவர், ஒரே மாவட்டத்தில், அதுவும் ஒரே தாலுகாவில் இத்தனை வருடங்கள் பணியில் இருந்தது குறித்தும், அவர் யார் யாருடன் தொடர்பில் இருந்தார். கடையநல்லூர் மற்றும் கேரளாவில் வாங்கியுள்ள சொத்துக்கள் விபரம் குறித்தும் ஆய்வு செய்து அறிக்கை அனுப்பியதன் காரணமாகவும்,

வாணியம்பாடி டி.எஸ்.பியாக புரமோஷனில் வருவதற்கு முன்னர், இன்ஸ்பெக்டராக பணியில் இருந்த போது தவறுதலாக துப்பாக்கியை பயன்படுத்திய விவகாரத்தின் காரணமாகவும், அவர் ஒய்வு பெறுவதற்கு ஒருநாள் முன்னதாக சஸ்பெண்ட் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. இருப்பினும் சஸ்பெண்டு செய்யப்பட்டதற்கான காரணம் குறித்து விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை

அதேபோல், ஆம்பூர் டிஎஸ்.பி மற்றும் வாணியம்பாடி, நாட்றம்பள்ளி, இன்ஸ்பெக்டர்கள் குறித்தும் சி.பி.சி.ஐ.டி. போலீசார் தகவல்களை சேகரித்து, மேலிடத்திற்கு அனுப்பியுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், வாணியம்பாடி டி.எஸ்.பி விஜயக்குமார் சென்னைக்கு அழைக்கப்பட்டு டி.ஜி.பி. அலுவலகத்தில் விசாரித்து வரும் சம்பவத்தையடுத்து, திருப்பத்தூர் மாவட்ட போலீசார் கலக்கத்தில் உள்ளனர். ■

தமிழ்நாடு | குமரகுரு

## 2026 சட்டமன்ற தேர்தல்...

# முக்குலத்தோர் ஓட்டுக்களை பெற தி.மு.க மும்முரம்..!



## ● களமிறங்கும் அன்பில்மகேஷ்!

**2026 தமிழக சட்டப்பேரவை தேர்தல் கள நிலவரம் இப்போதே கலகலக்கத்தொடங்கி இருக்கிறது. (எத்தனை வருடங்கள்தான் சூடு பிடிக்கிறது என எழுதுவது? இப்போது வெயில் சூடே தாங்கமுடியவில்லை)**

தி.மு.க அமைச்சர்கள் வீடு வீடாகப்போய் மக்களைச்சந்திக்கிறார்கள். எடப்பாடி பழனிச்சாமி கோவையில் சுற்றுப்பயணம் தொடங்கி விழுப்புரம், மயிலாடுதுறை என தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்து விட்டார்.

நா.த.க.வின் சீமானோ சில தொகுதிகளுக்கு வேட்பாளர்களையே அறிவித்து விட்டார். நடிகர் விஜயோ தன் அலுவலக வாசலில் வேலு நாச்சியார், பெரியார் உள்ளிட்ட சிலருக்கு மட்டுமே சிலை வைத்து விட்டு, மாலைகளும், மரியாதைகளும் செய்து, முக்குலத்தோர்தெய்வமாக வணங்கி வரும் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவரை மறந்து விட்டு மதுரையில் மாநாட்டுப் பணிகளைத் தொடங்கியிருக்கிறார்.

இந்நிலையில் தமிழகத்தில் தென்மாவட்டங்களில் உள்ள முக்குலத்தோர் வாக்குகளை பெற அ.தி.மு.க அக்கறை காட்டியதாக தெரியவில்லை. ஒரு காலத்தில் அ.தி.மு.க முக்குலத்தோர் கட்சி என்ற நிலை மாறி, இப்போது கவுண்டர் கட்சியாக மாற்றப்பட்டிருக்கிறது.

சசிகலாவை கட்சியை விட்டே காலி செய்த எடப்பாடி, அடுத்து டி.டி.வி.யை நீக்கினார்.



இசக்கிராஜாத்தேவர்



ஸ்ரீதர் வாண்டையார்



கருணாஸ்



மூர்த்தி தேவர்



நயினார் நாகேந்திரன்



எடப்பாடி பழனிசாமி



சீமான்



விஜய்

அதையடுத்து ஓ.பி.எஸ்ஸையும் நீக்கினார். தன்னைச்சுற்றி வேலுமணி, தங்க மணி, வீரமணி, முனுசாமி, ஜெயக்குமார் போன்ற முக்குலத்தோர் அல்லாதவர்களையே வைத்துக்கொண்டு பேசி வருகிறார். டெல்லிக்கு போகும் போதெல்லாம் நத்தம் விசுவநாதனையோ, ஆர்.பி.உதயகுமாரையோ, செல்லூர் ராஜூவையோ, கூட்டிச்செல்லாமல் முக்கிய சந்திப்புக்களில் முக்குலத்தோரை புறக்கணிக்கிறார்.


இதனிடையே தமிழகத்தில் முக்குலத்தோர் வாக்குகளை பெற தமிழக பா.ஜ.க. தலைவராக தேவர் சமூகத்தைச்சேர்ந்த நயினார் நாகேந்திரனை பா.ஜ.க மேலிடம் நியமித்திருக்கிறது. மதுரையில் முருகர் மாநாடு நடத்தி முத்துராமலிங்கத்தேவரை பற்றி பெருமையாகப்பேசி முக்குலத்தோர் வாக்குகளைப்பெற முயற்சிகளைத்தீவிரமாக்கி வருகின்றனர். மதுரை விமான நிலையத்திற்கு தேவர்பெயரை சூட்டவும் ஆலோசனை அதிகரித்திருக்கிறது. அடுத்ததாக இவ்வருடம் அக்டோபர் 30 தேவர் ஜெயந்தியன்று பிரதமர் மோடியே நேரடியாக பசும்பொன்னிற்கு வந்து தேவரை தரிசிக்க விருப்பததாகவும், டெல்லியில் முக்கியஸ்தர்கள் பேசி வருகின்றனர்.

இதையெல்லாம் உன்னிப்பாக கவனித்து வரும் தி.மு.க எதிலும் சாராத முக்குலத்தோர் வாக்குகளை கவர அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியை தென் மண்டலத்திற்கே செயலாளராக நியமிக்கவும் தயாராகி வருகிறது.

இதுகுறித்து நம்மிடம் பேசிய மூத்த அரசியல் விமர்சகர் ஒருவர் நம்மிடம், நீங்கள் சொல்வதெல்லாம் உண்மைதான் சார். வன்னியர்களுக்கு 10.5 சதவிகித இடஒதுக்கீட்டை அவசர கதியில் அறிவித்த எடப்பாடியை தங்களது எதிரியாக எண்ணும் முக்குலத்தோர் வாக்குகள் தற்போது குழப்பத்தில் உள்ளது. யாருக்கு வாக்களிப்பது? என்பதில் முக்குலத்தோரும் தவித்து போய்தானிருக்கிறார்கள். இதனால் 8 சதவிகிதம் முதல்10 சதவிகிதம் வரை உள்ள முக்குலத்தோர் வாக்குகளை அள்ள அன்பில் மகேஸ்பொய்யாமொழியை களமிறக்கி, அனைத்து தேவரின இயக்கங்களையும் சந்தித்து, அவர்களின் ஒட்டுமொத்த கோரிக்கைகளையும்உடனுக்குடன் நிறைவேற்றித்தர உத்தரவிட்டுள்ளனர். முக்குலத்தோர்களுக்கு என்ன வேண்டுமானாலும் செய்துகொடுக்கவும் சொல்லி இருக்கிறார்கள். எடப்பாடியை எதிரியாக கருதும் முக்குலத்தோர், த.வெ.க தலைவர் விஜயின் தேவர் புறக்கணிப்பு, இவை போன்ற காரணங்களால் யாருக்கு வாக்களிப்பது என்ற குழப்பத்திலிருக்கும் முக்குலத்தோர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் விதத்தில் செயல்படவிருக்கிறது தி.மு.கழகம். ஏற்கெனவே செல்வாக்கு மிகுந்த ஸ்ரீதர்வாண்டையார் தி.மு.க கூட்டணியில்தான் உள்ளார். புலிப்படை கருணாஸும், கோவில்பட்டி மூர்த்தி தேவரும் தி.மு.க பக்கமே உள்ளனர். நடிகர் கார்த்திக்கையும் கடைசி நேரத்தில் களமிறக்க காத்திருக்கின்றனர். பசும்பொன் மக்கள் பாதுகாப்பு இயக்கம் நடத்தி வரும் இசக்கிராஜாத்தேவரையும் வளைக்க ஏற்பாடுகள் நடக்கிறது! என்று அழுந்தந்திருத்தமாக பேசினார்.

தி.மு.க வாக்கு வங்கியை அதிகரிக்க, முக்குலத்தோர் ஓட்டுக்களை கவர. வாரியத்தலைவர்கள் நியமனத்தில் அவர்களுக்கு முக்கியத்துவம் தரப்போகிறதாம் தி.மு.க.!

அப்படி போடுங்க அன்பில் மகேஷ்..! ■




நாமக்கல் | சங்கர்

# கிட்னி பாளையமான பள்ளிபாளையம்..?

# ஒற்றை கிட்னியுடன் நடமாடும் 90 பெண்கள்..?

## ● அதிர்ச்சியில் சுகாதார துறை

**நாமக்கல் மாவட்டத்தில் விசைத்தறி தொழிலாளர்களின் ஏழ்மையை பயன்படுத்தி அவர்களின் கிட்னியை சட்ட விரோதமாக தனியார் மருத்துவமனைகளுக்கு விற்கப்படுவதாக புகார் எழுந்திருக்கிறது. ஒரு லட்சம் ரூபாய் அட்வான்ஸ் கொடுத்து மூன்று லட்சம் ரூபாய்க்கு வாங்கப்படும் கிட்னிகள் 50 லட்சம் ரூபாய் வரை விற்கப்படுவதாக பகீர் புகார் எழுந்திருக்கிறது.**

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தையே உலுக்கியது கிட்னி திருட்டு. ஏழை மக்களின் வறுமையை பயன்படுத்தி அவர்களது உடல் உறுப்புகளை விற்பனைக்காக பயன்படுத்தி வந்தது ஒரு கும்பல். அதை ஒட்டி பல சினிமா காமெடிகள் கூட வந்தது. அதற்கு பிறகு அவையெல்லாம் ஒழிந்து விட்டதாக நம்பப்பட்ட நிலையில் இன்னும் அந்த கொடூரம் நடைபெறுவது வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது.

கிட்னி திருட்டில் முக்கிய புரோக்கராக ஆலம்பாளையத்தை சேர்ந்த திராவிட ஆனந்தன் என்பவர் செயல்பட்டுள்ளார். இவர் தி.மு.கவை சேர்ந்த பேச்சாளர் என்பதும் கூடுதல் தகவல்.

இவர் தான் விசைத்தறி தொழிலாளர்கள் எந்த அளவுக்கு வறுமை கோட்டுக்கு கீழ் உள்ளார்களோ, அதாவது வீட்டு வாடகை கூட தர முடியாதவர்கள், சாப்பிட கூட வசதியில்லாதவர்கள், தங்களது பிள்ளைகளுக்கு திருமணம் முடிக்க இயலாதவர்களை குறி வைத்து தான் ஆனந்தன் செயல்பட்டுள்ளதாக சொல்கிறார்கள்.

இதற்கென்று ஈரோட்டில் அபிராமி என்ற மருத்துவ மனையும், திருச்சியில் தனலெட்சுமி மற்றும் சிதார் மருத்துவமனை என்று மூன்று மருத்துவமனைகள் கிட்னி திருட்டில் ஈடுப்பட்டு ஆபரேஷன் செய்ததாக கூறுகிறார்கள். இதில் பல கோடி பிசினஸ் நடைபெற்றுள்ளது என்கின்றனர். ஆனால் அந்த அப்பாவி பெண்களுக்கு சில லட்சங்கள் தான் கிடைத்துள்ளது.

மேலும், அவர்களது கிட்னி எடுக்கப்பட்ட பிறகு தொடர்ச்சியாக அவர்களுக்கு





திராவிட மா.ஆனந்தன்

சிகிச்சை அளிக்க வேண்டும். அதுவும் அளிக்கவில்லையாம். இதனால் சிலர் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதேபோல் கடந்த சில நாட்களுக்கு முன்பு ஆனந்தன் கிட்னியை விற்பனை செய்த பெண் ஒருவருக்கு கொடுக்க வேண்டிய பணத்தைத் தராமல் அலைக்கழிப்பதாக மீடியாக்களில் சொன்னபிறகு தான் இந்த விசயம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இதையடுத்து, நாமக்கல் ஆட்சியர் உத்தரவின் பேரில் மாவட்ட சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர் ராஜ்மோகன் தலைமையிலான மருத்துவக் குழுவினர் விசாரணை நடத்தினர். மேலும், இடைத்தரகர் ஆனந்தன் மீது பள்ளிபாளையம் காவல் நிலையத்தில் புகார் தெரிவிக்கப்பட்டு, வழக்குப் பதிவு செய்யப்பட்டு, தலைமறைவான அவரை போலீஸார் தேடி வருகின்றனர். கிட்னி திருட்டு குறித்து செய்திகள் வெளிவந்து ஒரு வாரம் ஆகியும், கிட்னி திருட்டில் புரோக்கராகச் செயல்பட்ட தி.மு.க நிர்வாகி திராவிட ஆனந்தனை, தி.மு.க அரசு கைது செய்யவில்லை. தனிப்படை அமைத்துத் தேடி வருவதாகக் காவல்துறை கூறி வருகையில், அந்த நபர், அவரது வீட்டருகே இரு சக்கர வாகனத்தில் சுற்றித் திரியும் சி.சி.டிவி காட்சிகள் வெளியாகியிருக்கின்றன.

சென்னை சுகாதாரத் துறை சட்ட இணை இயக்குநர் மீனாட்சி சுந்தரம் தலைமையிலான மருத்துவக் குழுவினர் கடந்த 18 ஆம் தேதி பள்ளிபாளையத்தில் கிட்னி விற்பனை செய்ததாக கூறிய பெண் உள்ளிட்ட 5 பேரிடம் விசாரணை நடத்தினர். விசாரணையில், கடன் பிரச்சினையால் கிட்னியை அவர் விற்பனை செய்தது தெரியவந்தது. இது போல 90 பேரிடம் கிட்னி திருட்டு நடந்துள்ளதாகவும் அதிர்ச்சி தகவல்கள் பரவி வருகிறது.

சுகாதாரத்துறை விசாரணை





அவர் அளித்த தகவல் அடிப்படையில், ஈரோட்டில் உள்ள அபிராமி கிட்னி கேர் என்ற தனியார் மருத்துவமனையில் கிட்னி அறுவை சிகிச்சை மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது. திருச்சியில் உள்ள தனலெட்சுமி மற்றும் தில்லைநகரில் உள்ள சித்தார் மருத்துவமனையைச் சுகாதாரத் துறையினர் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

மத்திய சுகாதாரத் துறை அதிகாரிகள் பள்ளிபாளையத்தில் விசாரணை நடத்த வரவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. இதில் தனலெட்சுமி சீனிவாசன் மருத்துவமனை, திருச்சி மண்ணச்சநல்லூர் தொகுதி எம்.எல்.ஏ கதிரவனுக்கு சொந்தமானதாகும். அதேபோல் திருச்சி தில்லைநகரில் உள்ள சிதார் மருத்துவமனை அமைச்சர் நேருவின் உறவினருடையது என்று சொல்லப்படுகிறது. இதனிடையே, கிட்னியை விற்பனை செய்ததாக பள்ளிபாளையத்தைச் சேர்ந்த ஒருவர் பேசிய ஆடியோ சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது.

வழக்கம்போல சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியம் கிட்னிகளை திருடிய யாரும் தப்பிக்க முடியாது என்று கூறியுள்ளார். தொடர்ந்து பல விஷயங்களில் தி.மு.க அரசு தனது செல்வாக்கை இழந்து வருவது கண்கூடாக தெரிகின்றது. இவற்றில் எல்லாம் அக்கறை காட்டவில்லை என்றால், வரும் தேர்தலில் தி.மு.கவின் ஓட்டு சதவிகிதம் மிகவும் குறைய வாய்ப்புகள் உண்டு என்பதே உண்மை... ■

திருப்பூர் | செல்வநாயகம்

# குரட்டை விடும் லஞ்ச ஒழிப்பு துறை... லஞ்சத்தில் புரளும் அதிகாரிகள்...

## ● வருவாய் இழப்பில் மாநகராட்சி

**திருப்பூர் மாநகராட்சியில் பல லட்சங்களை லஞ்சமாக பெற்றுக் கொண்டு கட்டிட அனுமதிக்கு போலி ஆவணங்கள் வழங்கப்படுவதாகவும், இதனால், அரசுக்கு கோடிக்கணக்கான ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், திருப்பூரில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது.**

என்னதான் நடக்கிறது திருப்பூர் மாநகராட்சியில் என அறிய களமிறங்கினோம்.

திருப்பூர் மாநகராட்சியில் தொழிற்சாலை கட்ட கட்டிட அனுமதி வழங்கி மாநகராட்சி உதவி ஆணையர் கணேஷ் குமார் வழங்கியதாக ஒரு ஆவணம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் அந்த ஆவணம் திருப்பூர் வடக்கு தலைமை சர்வேயர் ரமேஷ் கள ஆய்வு செய்யாமல் தொழிற்சாலை கட்டடத்திற்கு செல்லும் வழிதடம் மாநகராட்சிக்கு வழங்கப்பட்ட வழித்தடம் என ஆவணம் கொடுத்துள்ளார். ஆனால் அந்த ஆவணம் மாநகராட்சி உதவி ஆணையாளர் கணேஷ் அவர்களால் வழங்கப்படவில்லை என்று மாநகராட்சி தரப்பு கூறுகிறது.


அப்படி என்றால் திருப்பூர் மாநகராட்சி உதவி ஆணையர் கணேஷ் வழங்கிய ஆவணமா போலியாக தயாரிக்கப்பட்டதா ? அல்லது லஞ்சத்திற்காக வழங்கிய ஆவணமா? சிக்கலில் மாட்டியதால் அதிகாரிகள் கையை விரிக்கிறார்களா ? என தெரியவில்லை இது குறித்த விபரம் வருமாறு.

திருப்பூர் மாநகராட்சி முதலாவது மண்டலம் 25 வது வார்டு 15 வேலம்பாளையம் சிறுபூலுவப்பட்டியில் எஸ்.எப்.எண்:565/2B என்ற இடத்தில் சுமார் 14 ஆயிரம் சதுரடி இடத்தில் 13 ஆயிரம் சதுரடியில் தொழிற்சாலை கட்டிடம் கட்ட விக்னேஷ், என்பவர் பெரியாளர் விஜய் என்பவர் மூலம் விண்ணப்பித்துள்ளார். இதில் எஸ்.எப்.எண் : 565/2ஏ1ஏ2ல் உள்ள தனியார் சாலையை, திருப்பூர் மாநகராட்சி சாலை என்று போலியான சான்று கொடுத்து நகர ஊரமைப்பு அலுவலகத்தில் கட்டிட அனுமதி வழங்கப்பட்டது.

இந்த அனுமதியை மாநகராட்சி அதிகாரி ஆய்வுக்கு சென்ற போது தான் கட்டிடம் கட்டும் இடத்திற்கான வழித்தடம் தனியார் பெயரில் உள்ளது என்று தெரிய வந்துள்ளது,

திருப்பூர் மாநகராட்சி





வேலம்பாளையம் கிராமம் க.ச. எண். 565/2A1A, 583/2A1A1 மற்றும் 584/2A1ல் உள்ள தனியாருக்கு சொந்தமான சாலையினை ஆணையாளர், திருப்பூர் மாநகராட்சி பெயரில் வருவாய்த்துறை மூலம் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மாநகராட்சி ஆணையர் பெயரில் எந்தவித ஆவணங்களும் கடிதங்களும் அனுப்பப்படாத நிலையில் இப்பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இப்பெயர் மாற்றத்தினை ஆவணமாகக் கொண்டு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மூலம் மேற்கண்ட இடத்தில் தொழிற்சாலை கட்டிடம் கட்ட தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பொதுவாக மனைப்பிரிவு சாலைகளை மாநகராட்சி ஆணையாளருக்கு ஒப்படைப்பு செய்ய விண்ணப்பம் பெறப்பட்டு, மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஆணையாளரின் பரிந்துரை கடிதத்துடன் பதிவுத் துறையில் ஆணையாளர் பெயருக்கு தானசாசன பத்திரம் பதிவு செய்த பின்னரே வருவாய்துறை மூலம் உட்பிரிவு செய்ய மாநகராட்சி மூலம் கடிதம் வாயிலாக தெரிவிக்கப்படும். இந்நிலையில் மேற்கண்ட எந்த முறையையும் பின்பற்றாமல் ஆணையாளர், திருப்பூர் மாநகராட்சி பெயருக்கு தனியாருக்கு சொந்தமான இடம் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனை ரத்து செய்யுமாறும் இனி வருங்காலங்களில் இதுபோன்ற நடவடிக்கை ஏதும் நடைபெறாமல் இருக்கவும் தற்போது பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டது தொடர்பாக உரிய துறை ரீதியான மேல் நடவடிக்கை மேற்கொள்ளவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

1-2-25

நகல் :–



தனியார் பாதை

மாநகராட்சி பேரில் மாற்றப்படவில்லை என்ற உண்மை தெரிய வந்த உடனே நகர ஊரமைப்பு உதவி இயக்குனர் அட்னான் சாதிக் அமீர் அவர்களுக்கு திருப்பூர் மாநகராட்சி அதிகாரிகள் மூலம் வழித்தட சான்று போலியானது என்று கடிதம் அனுப்பப்பட்டது.

மாநகராட்சி அதிகாரிகளின் புகார் கடிதத்தின் அடிப்படையில் நகர ஊரமைப்பு உதவி இயக்குனர் அட்னான் சாதிக் அமீர், விக்னேஷ் என்பவருக்கு வழங்கிய தொழிற்சாலை கட்டிட அனுமதி சான்றை முற்றிலும் கேன்சல் செய்து விட்டு, கட்டிட அனுமதிக்கு பரிந்துரை செய்த இன்ஜினியர் விஜய்க்கு விளக்கம் கேட்டு சோக்காஸ் நோட்டீஸும் அனுப்பி உள்ளார் என்று பரபரப்பாட பேசப்படுகிறது.

இதுகுறித்து விசாரணையில் இறங்கினோம். அப்போது, வழித்தட போலிச் சான்றிதழ் குறித்து விசாரித்த பொழுது வழித்தடச் சான்று திருப்பூர் வடக்கு தாசில்தார் கதிர்வேல் ஒப்புதல் கொடுத்து, திருப்பூர் வடக்கு தலைமை சர்வேயர் ரமேஷ் சான்று வழங்கி உள்ளார். ஆனால் சம்பந்தப்பட்ட இடத்திற்கு திருப்பூர் வடக்கு தாசில்தார் கதிர்வேல் மற்றும் தலைமை சர்வேயர் ரமேஷ் ஆகிய யாரும் கள ஆய்வுக்கு செல்லவில்லையாம்.

மாநகராட்சி உதவி ஆணையர் வழங்கிய போலி சான்றிதழ் அடிப்படையில் வழித்தடம் திருப்பூர் மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டதாக ஆதாரமாக வைத்துக் கொண்டு மாநகராட்சி வழித்தடம் என வருவாய் துறையினர் சான்று வழங்கி விட்டார்களாம்.

சாதாரண பொதுமக்கள் வருவாய் துறையினரிடம் சாதாரண சான்று வாங்க வேண்டுமென்றால் வருவாய்த்துறையினர் பல்வேறு விசாரணை, ஆவணம் என அலைக்கழிக்கும் சூழ்நிலையில், இருந்த இடத்தில் இருந்தே பல லட்சம் லஞ்சமாக வாங்கிக் கொண்டு போலி ஆவணத்தை ஆதாரமாக வைத்து கள ஆய்வு செய்யாமல் வழித்தட சான்று வழங்கப்பட்டதாக சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

மேலும் சமூக ஆர்வலர்கள் கூறும்போது, முதல் மண்டல உதவி ஆணையர் கணேஷ் மற்றும் நகரமைப்பு இன்ஜினியர் சிவகுமார் ஆகியோர் பல லட்சம் ரூபாய் லஞ்சமாக பெற்றுக் கொண்டு தனியார் வழித்தடத்தை, மாநகராட்சி தடம் என சான்று வழங்கிவிட்டு, திடீரென பிரச்சனை பெரிதானவுடன் போலி ஆவணம் என நாடகம் ஆடுகிறார்களா என்று கேள்வி எழுப்புகின்றனர். இதேபோன்று திருப்பூர் மாநகராட்சியில் பல்வேறு இடங்களில் சட்டவிரோதமான போலி ஆவணங்கள், இணைத்து டி.டி.சி.பி அனுமதி, கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு பல கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாம்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் நாரணரே மனிஷ் ஷங்கர்ராவ், மாநகராட்சி ஆணையர் அமீத், திருப்பூர் மாநகர காவல்துறை ஆணையர் ராஜேந்திரன் ஆகியோர் இணைந்து புலன் விசாரணை செய்தால் திருப்பூர் மாநகராட்சியில் பல கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்களுக்கு, மாநகராட்சி சொத்து என்று போலி ஆவணம் மூலம், கட்டிட அனுமதி வழங்கியது வெளிச்சத்துக்கு வரும் என்று கூறும் சமூக ஆர்வலர்கள்,

போலி சான்றிதழ் கொடுத்து அனுமதி வாங்கிய பொறியாளர் விஜய் மீது மாநகராட்சி காவல்துறையில் புகார் அளித்து நடவடிக்கை எடுக்க தயங்குவது ஏன்? என்றும், போலி சான்றிதழ் வழங்க உதவிய அதிகாரிகள் யார்? இதுபோல்

எத்தனை பொறியாளர்களுக்கு போலிச் சான்றிதழ் வழங்கி, டி.டி.சி.பி மற்றும் கட்டிட அனுமதி வழங்கி, கோடிக்கணக்கான ரூபாய் கள்ளாகட்டிய அதிகாரிகள் குறித்து புலன் விசாரணை செய்தால், மாபெரும் ஊழல் வெளிவரும் என்கின்றனர்.

போலி ஆவணம் குறித்து நாம் திருப்பூர் மாவட்ட நில அளவு பதிவேடுகள் துறையின் உதவி இயக்குனர் ஜெய் சிவகுமாரிடம் விசாரித்த பொழுது, தனக்கு எதுவும் தெரியாது என்று கூறி கை விரித்து விட்டார், திருப்பூர் மாநகராட்சி நகரமைப்பு பொறியாளர் இளங்கோவனிடம் கேட்டதற்கு, விசாரித்து கூறுவதாக கூறினார். ஆனால், இதுவரை எந்த பதிலும் கூறவில்லை, ஏன் என்றால், போலி ஆவண ஊழலுக்கு உயர் அதிகாரியின் அலட்சியம் அல்லது லஞ்சம் பணம் முக்கிய காரணமாக இருக்கலாம் என்கின்றனர் விபரமறிந்தவர்கள்.

போலி ஆவண தயாரிப்பிற்கு உறுதுணையாக இருந்து, கள ஆய்வு செய்யாமல் ஆவணம் வழங்க உறுதுணையாக இருந்த திருப்பூர் வடக்கு தாசில்தார் கதிர்வேல், தலைமை சர்வேயர் ரமேஷ், திருப்பூர் மாநகராட்சி முதல் மண்டல உதவி ஆணையாளர் கணேஷ், மாநகராட்சி நகரமைப்பு பொறியாளர் சிவகுமார் ஆகிய அதிகாரிகள் எப்படி இவ்வளவு தைரியமாக செயல்படுகிறார்கள். மேலிட அரசியல் செல்வாக்கு காரணமா? என்று கேள்வி எழுப்பும் அவர்கள், திருப்பூர் மாவட்டத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை செயலற்று விட்டதா? என்றும் கேள்வி எழுப்புகின்றனர். ■


ரமேஷ்


விஜய்


சிவக்குமார்


**பரபரப்பு செய்தி**

வெளியிட்டாளர்
& ஆசிரியர்
**S.P.இராமநாதன்**

இணையாசிரியர்
**A.ஜோதி சங்கர்**

பொறுப்பாசிரியர்
**நா.இராதாகிருஷ்ணன்**

நிருபர்கள்
**ஜேம்ஸ் நெப்போலியன்**
**இராமநாதபுரம் முஸ்தபா**
**பொங்கு செல்வம்**
**தனசேகர்**
**திண்டுக்கல் குமார்**
**V.சங்கர்,**
**V.செல்வநாயகம்**
**K.மணிகண்டன்,**
**குமரிமைந்தன், பாக்யா,**
**வெங்கடேஷ்**

வடிவமைப்பு
**த.கோபாலகிருஷ்ணன்**



நிர்வாக அலுவலகம்
**கதவு எண்: 7/31, A - பிளாக், நெ.69, கிரிஸ்டல் கோர்ட், அண்ணா நகர் (கிழக்கு) சென்னை - 600 101**

தொடர்புக்கு
**99405 14136**
**9444703555**

மின்னஞ்சல்
paraparappuseithiweekly@gmail.com

www.paraparappucheithi.com
paraparappucheithi
paraparappucheithi

மதுரை | பாக்யா

# மண்டல தலைவர்கள் ராஜினாமா...

## ● மதுரையின் மாண்பைக் குறைத்த மாநகராட்சி ஊழல்...



இந்திராணி

**சங்கம் வளர்த்து தமிழுக்கு பெருமை சேர்த்த மதுரையின் மாண்பு, மலைக்க வைக்கும் மாநகராட்சி ஊழல்களால் குறைந்துள்ளதை எண்ணி வேதனைபடுகின்றனர் மதுரை மக்கள்..**

*தமிழகத்தில் உள்ள 21 மாநகராட்சிகளில் மூன்றாவது பெரிய மாநகராட்சி எனும் சிறப்புடையது மதுரை மாநகராட்சி.147 சதுர கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள இதன் 100 வார்டுகள் ஐந்து மண்டலமாக செயல்படுகிறது. இங்குள்ள சுமார் 4 லட்சத்து 12 ஆயிரம் சொத்து வரி கட்டிடங்களில், சுமார் 3 லட்சம் வணிக வரி செலுத்தும் கட்டிடங்கள் உள்ளன. தி.மு.க 67, காங்கிரஸ் 5,சி.பி.எம் 4,ம.தி.மு.க 3,வி.சி.க 1என தி.மு.க கூட்டணி கட்சியினர் 80 பேரும், அ.தி.மு.க 15,பா.ஜ.க 1, சுயேட்சை 4 என 100 வார்டு கவுன்சிலர்கள் உள்ளனர்.மேயராக தி.மு.க வைச் சேர்ந்த இந்திராணி பொன்வசந்த், துணை மேயராக சி.பி.எம் கட்சியைச் சேர்ந்த நாகராஜன் உள்ளனர்..இதன் ஆணையாளராக சித்ரா விஜயன் உள்ளார்.*

*நீண்ட நெடிய பாரம்பரியம் கொண்ட இந்த மாநகராட்சியின் பெருமை, அந்த பெருமை ஊழல்களால் தற்போது சிதைந்து விட்டது. எதிர்கட்சிகள் அவ்வப்போது ஊழல்கள் நடப்பதாக குற்றம் சாட்டியும் கண்டு கொள்ளாமல் இருந்த நிலையில், மண்டல தலைவர்களை ராஜினாமா செய்ய சொல்லி முதல்வர் உத்தரவிட்ட பின்னர் தான் பரபரப்பானது. ஏற்கனவே மேயரின் கணவர் பொன் வசந்தை கட்சியில் இருந்து நீக்கிய நிலையில், மண்டல தலைவர்களின் ராஜினாமா விவகாரம் தமிழக அளவில்*





வாசுகி



கவிதா



புவனேஸ்வரி

பரபரப்பை ஏற்படுத்தியது.

ஆளுங்கட்சியினர் மட்டுமன்றி, இங்குள்ள சில அதிகாரிகள் தான் தைரியமாக முறைகேட்டில் ஈடுபட்டுள்ளனர்.அதை ஆய்வு மூலம் கண்டறிந்தது முன்னால் ஆணையர் தினேஷ்குமார் அவர்கள் தான். அவர் பணிபுரிந்த போது தான் வணிக கட்டிடங்களுக்கு வரி விதிப்பு தொடர்பாக குழு அமைத்து ஆய்வு செய்தார். அப்போது தான் வரியை குறைத்து மதிப்பீடு செய்து, 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் ரூபாய் 150 கோடிக்கு மேல் வருவாய் இழப்பை ஏற்படுத்தி உள்ளனர் என தெரிய வந்தது.

மத்திய குற்றப்பிரிவு போலீசாரின் தொடர் விசாரணையில் இது உண்மை என தெரிய வரவே, மாநகராட்சி உதவி வருவாய் அலுவலர் செந்தில் குமரன்,உதவி கமிஷனர் (ஓய்வு) ரெங்கராஜன் மற்றும் ஒப்பந்த ஊழியர்கள் கார்த்திகேயன், தனசேகரன்,சதீஷ் மற்றும் இடைத் தரகர்கள் சகா உசேன், முகமது நூர், ராஜேஷ் ஆகிய 8 பேர் கைது செய்யப்பட்டனர்.மேலும் 5 மண்டல தலைவர்கள், அதிகாரிகளுக்கு சம்மன் அனுப்பப்பட்டது.

இதையடுத்து அ.தி.மு.கவினர் கடந்த 8 ஆம் தேதி ஆர்ப்பாட்டம் செய்வதாக அறிவித்தனர்..இந்நிலையில் 5 மண்டல தலைவர்களையும் ராஜினாமா செய்யும்படி முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார். அதன்படி மண்டல தலைவர்கள் வாசுகி, சரவண புவனேஸ்வரி, பாண்டிச்செல்வி, முகேஷ் சர்மா, சுவிதா ஆகியோர் ராஜினாமா செய்தனர். மேலும் கடந்த 15 ஆம் தேதி மாநகராட்சி பில் கலெக்டர்கள் ராமலிங்கம், கண்ணன், ஆதிமூலம், ரவிச்சந்திரன், பெலிக்ஸ் ராஜ மாணிக்கம், ரஞ்சித் செல்வக்குமார், கம்ப்யூட்டர் ஆபரேட்டர் கருணாகரன் ஆகிய 7 பேர்களை, கமிஷனர் சித்ரா விஜயன் அதிரடியாக சஸ்பெண்ட் செய்தது கூடுதல் பரபரப்பை ஏற்படுத்தியது.

கம்ப்யூட்டர் புரோக்ரமராக இருந்த விஜயலெட்சுமி உடல் நலக்குறைவால் மருத்துவ விடுப்பில் இருந்த போதும், அவரது இறப்புக்குப் பிறகும், அவரது இடத்திற்கு வந்தவர் மூலமே பாஸ்வேர்டுகள் பரிமாறப்பட்ட பிறகு தான் அவரவர் இஷ்டத்துக்கு முறைகேட்டில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.ஒவ்வொரு அதிகாரியும் பல காரணங்களை கூறி தப்பித்தாலும், ஊழலின் பட்டியல் நாளுக்கு நாள் கூடிக் கொண்டே இருக்கிறது. மதுரையின் வளர்ச்சியை எதிர் நோக்கி காத்திருந்த மக்கள், மாண்பை குறைத்த அதிகாரிகளையும், அரசியல்வாதிகளையும் நினைத்து நொந்து போய் உள்ளனர்.

இது குறித்து சமூக ஆர்வலர்கள் கூறுகையில் அன்னை மீனாட்சி குடி கொண்டிருக்கும் மதுரையில் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் அடித்த கூட்டுக் கொள்ளை மன்னிக்க முடியாதது. சிறு வியாபாரிகள், ஏழை மக்கள் வரி கட்டாமல் விட்டால் வரிந்து கட்டிக்கொண்டு நடவடிக்கை எடுக்கும் மாநகராட்சி நிர்வாகம், பணக்காரர்களுக்கு மட்டும் கைப்பாவையாக செயல்பட்டது வெட்கக்கேடானது. பல மாதங்களுக்கு



இந்திராணி



பாண்டிச்செல்வி



முகேஷ் சர்மா

முன்பே மாநகராட்சி எதிர் கட்சி தலைவர் சோலை ராஜா மட்டுமன்றி, முன்னாள் அமைச்சர்கள் செல்லூர் ராஜூ, ஆர்.பி. உதயகுமார் ஆகியோரும் முறைகேடுகள் நடப்பதாக தொடர்ந்து கூறி வந்தனர். அப்போதே விசாரணை நடத்தி இருந்தால் இந்த அளவு ஊழல் நடந்திருக்காது.மதுரையில் இரண்டு அமைச்சர்கள் இருந்தும் இதை கண்காணித்து கண்டிக்கவில்லை. அதனால் தான் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் போட்டி போட்டு கூட்டுக் கொள்ளை அடித்துள்ளனர்.அரசியல்வாதிகளுக்கு இணையாக மாநகராட்சி ஊழியர்கள் பலர் பினாமி பெயரில் சொத்துக்களை குவித்து தொழிலதிபர்களாகவும், கோடீஸ்வரர்களாகவும் மாறி விட்டனர் என்றார்.

மேலும், இது குறித்து விசாரணை மற்றும் வழக்குகள் தீவிரமாக நடந்து வந்தாலும், சட்டத்தில் உள்ள சில ஓட்டையின் வழியாக ஊழல் முதலைகள் தப்பிக்க முயற்சித்து வருகின்றனர். எனவே விசாரணை அதிகாரிகள் உரிய ஆதாரங்களை சமர்ப்பித்து, நீதிமன்றத்தில் கடுமையான தண்டனை பெற்றுத் தரவேண்டும். அப்போது தான் அனைத்து துறை அதிகாரிகளும் தண்டனைக்கு பயந்து, ஓரளவாவது நேர்மையாக பணிபுரிவார்கள். இதில் வேதனையான விஷயம் பல முக்கிய கட்சிகள் இந்த ஊழல் குறித்து கண்டனம் தெரிவிக்கவில்லை. அமெரிக்காவில் பிரச்சினை என்றாலும் கண்டித்து அறிக்கை விடும், மார்க்சிஸ்ட் கட்சியை சேர்ந்த மதுரை எம்.பி.வெங்கடேசன் இது குறித்து பேசவில்லை. அவரது கட்சியைச் சேர்ந்த நாகராஜன் துணை மேயராக உள்ளதாலா.? அல்லது போராளிக் கட்சி என்பதை மறந்து விட்டாரா.? என தெரியவில்லை.அவர் மட்டுமல்ல பல முக்கிய தலைவர்கள் கூட வாய் திறக்கவில்லை.நாங்கள் நம்புவது நீதிமன்றம் தான். அங்கு நல்ல தீர்ப்பு வரும் என நம்புகிறோம் என்றனர் சமூக ஆர்வலர்கள்.

எப்படியோ முத்தமிழ் வளர்த்த மதுரையின் மாண்பை குறைத்த அனைவருக்கும் உரிய தண்டனை கிடைத்தாலே மதுரை மக்களுக்கு மகிழ்ச்சி தான் என்பதே நிதர்சனமான உண்மை... ■


பரபரப்பு செய்தி
மாதமிருமுறை இதழ

விளம்பர கட்டணம்

| | பல வண்ணம் | | | | கருப்பு வெள்ளை |
|---|---|---|---|---|---|
| | முதல் உள் அட்டை | கடைசி உள் அட்டை | வெளி அட்டை | உள் பக்கம் | உள்பக்கம் |
| முழு பக்கம் | ரூ.20,000 | ரூ.20,000 | ரூ.30,000 | ரூ.15,000 | ரூ.10,000 |
| அரைப்பக்கம் | | | | ரூ.8,000 | ரூ.6,000 |

தொடர்புக்கு: 99405 14136 / 94450 45619



# தர்மஸ்தலாவில் நரகவேட்டை..?

# கொத்துக் கொத்தாய் 100 பெண்களின் சடலங்கள்..?

## பின்னணியில் அரசியல் விஐபி..?

**கடந்த பல ஆண்டுகளாக பிஞ்சுக் குழந்தைகள், இளம் சிறுமிகள், பள்ளி, கல்லூரி மாணவிகள், இளம்பெண்கள் என பாலியல் இச்சைக்கு ஆளாக்கப்பட்டு, ஆசிட் ஊற்றி, கொடுமாக எரித்துக்கொன்று தர்மஸ்தலா, மஞ்சுநாதர் கோயில் வளாகத்தில் புதைக்கப்பட்ட பயங்கரம் நாடு முழுவதையும் கொந்தளிக்க வைத்துள்ளது. இந்தக் காமக் கொடூரச் சம்பவங்களுக்கு பின்னணியில் அரசியல் வி.ஐ.பி இருப்பதாகக் கசியும் தகவல்களால் கர்நாடகாவே பேரதிர்ச்சியில் உறைந்துள்ளது.**

கர்நாடக மாநிலத்தின் தெற்கு கன்னட மாவட்டத்தில், நேத்ராவதி ஆற்றின் கரையில் அமைந்துள்ளது தர்மஸ்தலா மஞ்சுநாதர் கோயில், இந்து, சமண மதங்களின் புண்ணிய ஸ்தலம். இந்து, வைணவ பிராமணர்கள் பூஜைகளை நடத்த, சமண மதத்தைச் சேர்ந்த ஹெக்டே குடும்பத்தினர் கோயிலை நிர்வகிக்கின்றனர். அதன் தர்மகர்த்தா பாஜக எம்.பி., வீரேந்திர ஹெக்கடே. இந்தக் கோயில், அரசியல் தலைவர்கள், சினிமா பிரபலங்கள் முதல் சாதாரண பக்தர்கள் வரை நாள்தோறும் ஆயிரக்கணக்கானோர் வந்து செல்கின்றனர். அந்த புனித ஸ்தலம் இப்போது நரக பூமியாக மாறி இருக்கிறது.

ஜூன் 3 ஆம் தேதி கர்நாடக போலீஸ் ஸ்டேஷனுக்கு கடிதத்தோடு, சேர்ந்து ஒரு பார்சலும் வருகிறது. வழக்கம்போல வரக்கூடிய புகார் கடிதமாக இருக்கும் என நினைத்து



சுஜாதாபட்

அதைப் பிரித்து பார்த்த போலீஸ்காரர் திகைத்துப் போய் இருக்கிறார். காரணம், பிரசித்தி பெற்ற தர்மஸ்தலா மஞ்சுநாதர் கோயிலில் நூற்றுக்கும் மேற்பட்ட இளம்பெண்களையும், மாணவிகளையும் பாலியல் வன்கொடுமை செய்ததோடு, கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டு கோயில் வளாகத்திலேயே புதைக்கப்பட்டு இருப்பதாக அந்தக் கடிதத்தில் கூறப்பட்டு இருந்தது. கடிதத்தில் இருப்பது உண்மைதான் என்பதை உறுதிப்படுத்துவது போல் மனித எலும்புகளும் அனுப்பட்டு இருந்தது.

உடனடியாக கடிதத்தையும், பார்சலையும் உயர் அதிகாரிகளிடம் காட்டி இருக்கிறார் அந்தக் காவலர். அதைப்பார்த்த உயரதிகாரிகளுக்கு அந்தக் கடிதத்தில் இருப்பது உண்மைதானா? இல்லை கோயில் மீது பரபரப்பை கிளப்புவதற்காக யாராவது அனுப்பியதா? என்கிற சந்தேகம் எழுந்துள்ளது. இந்த சந்தேகங்களுக்கு விடை கிடைக்க வேண்டும் என்றால், இந்த கடிதத்தை அனுப்பியது யார்? என்கிற தீவிர விசாரணையில் இறங்கினர். தர்மஸ்தாலா கோயில் தூய்மை பணியாளராக இருந்த பீமா என்பவர்தான் இந்தக் கடிதத்தை அனுப்பியதாக உறுதி செய்தனர். பிறகு பீமாவை நேரில் வரவழைத்து விசாரித்த போதுதான் பல அதிர்ச்சிகள் அம்பலமானது. இந்த விவகாரம் கர்நாடக மாநிலத்தை மட்டுமல்லாது ஒட்டு மொத்த நாட்டையே நடுநடுங்க வைத்துள்ளது.

கோயிலின் முன்னாள் தூய்மை பணியாளர் பீமா நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலம்தான் கர்நாடக அரசையே கதி கலங்க வைத்து இருக்கிறது. பீமா வழக்கம் போல் கோயிலில் வேலை செய்து கொண்டு இருந்துள்ளார். அப்போது நேத்ராவதி நதிக்கரைக்கு அருகில் நம்பர் 555 என்கிற கருப்பு கலர் காரில் வந்தவர்கள் இரு இளம் பெண்களின் சடலங்களை பீமாவிடம் கொடுத்து கோயில் வளாகத்தில் புதைக்கச் சொல்லி இருக்கிறார்கள். அதற்கு கூலியாக 25 ரூபாய் சம்பளமாக கொடுக்கிறோம். இந்த விஷயம் வெளியில் வரக்கூடாது எனச் சொல்லி இருக்கிறார்கள். 25 ரூபாய்க்காக சடலங்களை கோயில் வளாகத்தில் புதைக்க ஓகே சொல்லி இருக்கிறார் பீமா. இப்படியே அடிக்கடி மாணவிகள், இளம் பெண்கள் என நூற்றுக்கும் மேற்பட்ட சடலங்களை 25 ரூபாய் சம்பளத்துக்காக புதைத்து வந்திருக்கிறார் பீமா.

அடுத்தடுத்து பீமாவை அழைக்கும் அந்த மிருகங்கள், இன்னிக்கு ஒரு அசைன்மென்ட் இருக்கு வா.. எனக் கூப்பிட்டு, எந்தெந்த சடலத்தை எந்த திசையில் புதைக்க வேண்டும் எனச் சொல்லி விடுவார்களாம். அவர்கள் சொன்ன மாதிரியே அந்த இடங்களில் பீமா புதைத்து வந்திருக்கிறார். ஆனால், எப்படி உயிரிழந்தார்கள்? அவர்கள் உடம்பில் இருக்கும் ரண காயங்களுக்கு யார் காரணம்? என்கிற எந்த விஷயமும் பீமாவுக்கு தெரியாது. இந்த சம்பவம் 1995 லிருந்து 2014 வரையிலான காலகட்டத்தில் நடந்திருக்கிறது. இதற்கிடையே 2012ல் பீமா சொந்த ஊருக்கு எஸ்கேப் ஆகி இருக்கிறார். இந்த விஷயம் அந்தக் கொடூரர்களுக்கு தெரியாது.

அடுத்த சில நாட்களில் இரவு பதினேழு வயதான சைஜன்யா என்கிற மாணவியின் சடலத்தை ஆடம்பரக் காரில் வைத்து தர்மஸ்தலாவுக்கு கொண்டு வந்திருக்கிறார்கள்.

தர்மஸ்தலா காவல் நிலையம்








வழக்கம்போல பீமாவுக்கு போன் செய்து இருக்கிறார்கள். இன்னைக்கு ஒரு அசைன்மென்ட் இருக்கு. எங்கே இருக்கிறாய் நீ? உடனே வா என்று அழைக்க, அதற்கு பீமாவோ, நான் ஊரில் இருக்கிறேன். இப்பொழுது என்னால் வர முடியாது என திட்டவட்டமாக மறுத்து இருக்கிறார். இதற்கு மேல் இவனை டைட் பண்ண வேண்டாம் என முடிவுக்கு வந்தவர்கள், மஞ்சுநாதர் கோவில் பக்கத்திலேயே மாணவி சைஜன்யாவின் உடலை அப்படியே போட்டுவிட்டு எஸ்கேப் ஆகி இருக்கிறார்கள். ஸ்கூலுக்குப் போன மகளை காணவில்லை என சைஜன்யாவின் தந்தை காவல்துறையில் புகார் அளித்து இருக்கிறார். அதை வைத்து வழக்குப் பதிவு செய்த காவல்துறையினர் சைஜன்யாவை பல இடங்களில் தேடி அலைந்து கொண்டு இருந்தபோதுதான் மஞ்சுநாதர் கோவில் பக்கத்தில் சடலமாக கிடைக்கிற தகவல் போலீசாருக்கு தெரியவந்தது.

சடலத்தை மீட்டு போஸ்ட்மார்டத்திற்கு அனுப்பி வைத்த சில மணி நேரத்திலேயே ரிப்போர்ட் வந்தது. அதில் சைஜன்யாவை கொடூரமான முறையில் பாலியல் வன்கொடுமை செய்து வெறித்தனமாக அடித்து கொலை செய்து இருப்பது தெரிய வந்தது. கோவில் வளாகத்தில் சைஜன்யாவின் சடலம் மீட்கப்பட்டதால் இந்த கொலை வழக்கு மிகப் பெரும் பேசுபொருளாக மாறியது.

இந்த விஷயத்தை கேள்விப்பட்டு ஊரில் இருந்து வந்த பீமா வழக்கமாக சடலத்தை கொண்டு வந்து புதைக்கச் சொன்னவர்களிடம் இதைப் பற்றி கேட்டிருக்கிறார். பாலியல் வன்கொடுமை செய்து அவர்களை சித்திரவதை செய்து கொலை செய்தது மட்டுமல்லாமல் என்னிடம் பணத்தை கொடுத்து புதைக்க சொல்லி இருக்கிறீர்களா? என கேட்டு கொந்தளித்து இருக்கிறார். இந்த விஷயம் வெளியில் தெரிந்தால் நீயும், உன் குடும்பமும் உயிரோடவே இருக்க மாட்டீர்கள் என கொலை மிரட்டல் விடுத்து இருக்கிறார்கள். அதனால், என் உயிரே போனாலும் பரவாயில்லை என முடிவெடுத்து தர்மஸ்தலா கோயில் நிர்வாகிகளிடம் சென்று நடந்ததை பற்றி சொல்லி இருக்கிறார் பீமா. அவர்களும் பீமாவிற்கு கொலை மிரட்டல் விடுத்து இருக்கிறார்கள். பிறகுதான் தர்மஸ்தலா கோயில் நிர்வாகிகள் மேற்பார்வையில்தான் இந்த கொடூர கொலைகள் நடந்திருக்கும். அவர்கள்தான் இந்த கேடுகெட்ட வேலையை செய்திருக்கிறார்கள் என்பது பீமாவுக்கு தெரிய வந்திருக்கிறது.

இதற்கு மேலும் இந்த இடத்தில் இருக்கக் கூடாது என முடிவு செய்த பீமா, 2014ல் அவர்களுக்கு தெரியாமல் ஊரை விட்டு எஸ்கிப் ஆகி இருக்கிறார். ஆனால், இப்போது வரை பீமாவிற்கு கொலை மிரட்டல் வந்து கொண்டே இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இளம்பெண்கள், மாணவிகள் என இப்படி பலரின் உயிரிழப்பிற்கு நாமும் ஒரு காரணமாக இருந்து விட்டோமே என மன உளைச்சலில் இருந்த பீமா, நடந்த சம்பவங்களை பற்றி கடிதம் எழுதி போலீசுக்கு அனுப்பியதில்தான் இந்த விஷயம் பெரும் பிரளயமாக கிளம்பி இருக்கிறது. தனது அடையாளத்தை மறைத்து, கருப்பு உடையணிந்து, பலத்த காவல் பாதுகாப்புடன் பெல்தங்கடி மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜராகி இந்த வாக்குமூலத்தை அளித்துள்ளார் பீமா.

பின்னர் கோயிலுக்கு வந்து பல இடங்களை தோண்டிப் பார்த்தபோது நிறைய எலும்புக்கூடுகளாக வந்திருக்கிறது. எல்லாவற்றையும் கைப்பற்றிய போலீசார் எலும்புக்கூடுகளை ஆய்வுக்காக அனுப்பி வைத்துள்ளனர்.

கடந்த ஜூலை 11ஆம் தேதி 2025 நீதிமன்றத்தில் நீதிபதியிடம் இது தொடர்பான சில புகைப்படங்களையும் பகிர்ந்துள்ளார் பீமா . அவரது வாக்குமூலத்தில், இறந்த பெண்கள், சிறுமிகளின் உடலை புதைக்கச் சொல்லியும், எரிக்கச் சொல்லியும் எனக்கு கட்டளையிட்டார்கள். அப்படி நான் செய்யவில்லை என்றால் என்னையும், என் குடும்பத்தையும் அழித்துவிடுவேன் என்று மிரட்டினார்கள். நான் ஒரு சாதாரண மனிதன். அதனால் பயந்துகொண்டு அவர்கள் சொன்னதை எல்லாம் செய்து கொண்டு இருந்தேன். கோயில் வளாகத்தில் பலர் எரிக்கப்பட்டாலும்கூட, நேத்ராவதி ஆற்றங்கரையில் பெரும்பாலனவர்கள் புதைக்கப்பட்டு இருக்கலாம் என மேலும் அதிர வைத்திருக்கிறார் பீமா.

1997 லிருந்து அவர்கள் சொன்னதை செய்து கொண்டு இருந்தீர்களே... 2014ல் ஏன் ஓடிப்போனீர்கள்? என்று பீமாவிடம் கேட்டதற்கு, 2014 டிசம்பர் மாதத்தில் என்னுடைய குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளம் பெண்ணுக்கு இந்த மாதிரியான ஒரு பாலியல் தொந்தரவு இந்த பெரிய மனிதர்கள் தரப்பிலிருந்து வந்தது. அதனால் வேற வழியில்லாமல் நான்



பயந்து போய் வேற ஒரு மாநிலத்துக்கு ஓடிவிட்டேன். இந்த விவகாரத்தில் ஒரு பெரிய மனிதரின் குடும்பம் இருக்கிறது. இறந்த ஆன்மாக்களுக்கு வந்து ஒரு நிம்மதியை என்னால் கொடுக்க முடியும் என்பதற்காகத்தான் இப்போது நான் வெளியில் வந்து இருக்கிறேன் என்று சொல்லி இருக்கிறார்.

பீமா கூறிய அந்த பெரிய மனிதர் யார்? என்கிற மிக பிரதானமான கேள்வி எழுகிறது. இந்த மஞ்சுநாத சுவாமி கோவிலை நிர்வகிக்கக்கூடிய ஒரு பெரிய குடும்பம் இருக்கிறது. காலம் காலமாக, தலைமுறை தலைமுறையாக அந்த குடும்பம்தான் இந்த கோவிலை நிர்வகித்து வருகின்றனர். அந்த குடும்பத்தைச் சேர்ந்த ஒரு நபர்தான் இதற்கு பின்னணியில் இருக்கிறாரா? என்கிற கேள்விகள் எழுப்பப்பட்டாலும் தற்போதுவரை அதிகாரப்பூர்வமாக எந்த ஒரு பெயரும் வெளியிடப்படவில்லை. இதற்கு பின்னணியில் அங்கு இருக்கக்கூடிய மாவட்ட நிர்வாகம், காவல்துறையின் அமைதியும்கூட இந்த சந்தேகத்தை மேலும் வலுவாக்குகிறது. இந்நிலையில் வயதான சுஜாதா பட் என்கிற 60 வயது பெண்மணியும் தர்மஸ்தலாக்கு வந்து சேர்ந்திருக்கிறார். அவர், 2003 ஆம் ஆண்டு மருத்துவ மாணவியான என்னுடைய மகள் அனன்யா, தர்மஸ்தலாவுக்கு வந்தபோது, காணாமல் போனார். அவர் காணாமல் போன நேரத்தில் நான் கொல்கத்தாவில் இருந்து தர்மஸ்தலாக்கு வந்து இது சம்பந்தமாக புகார் கொடுத்தேன். உள்ளூர் போலீசார் எனது புகாரை எடுத்துக்கொள்ளவில்லை.

உனது மகள் யாருடனாவது ஓடிப் போய் இருப்பாள் என்று சொல்லி புகாரை எடுத்துக் கொள்ளவில்லை. வேறு வழியே இல்லாமல் இங்கு இருந்த அரசு அதிகாரிகள், ஊழியர்கள் எல்லோரையும் சந்தித்து என்னென்னவோ முயற்சி செய்தேன். எதுவுமே எனக்கு பலன் அளிக்கவில்லை. பிறகு கோவில் வாசலில் திகைத்துப்போய் உட்கார்ந்து இருந்தபோது ஒரு கும்பல் என்னிடம் பேச்சுக் கொடுத்து, திடீரென தாக்கி தூக்கிச் சென்று விட்டார்கள். அதற்குப் பிறகு என்னை கை, கால் எல்லாம் கட்டி அடித்து கொடுமை செய்தார்கள். மரியாதையாக ஓடிப் போய்விடு என்று மிரட்டினார்கள். அவர்கள் அடித்த அடியில் மயக்கம் போட்டு விழுந்ததால் மூன்று மாதங்களாக கோமாவில் இருந்தேன். மூன்று மாதம் கழித்து நிதானத்துக்கு வந்தபோது பெங்களூருவில் இருந்தேன். எப்போது பெங்களூரு வந்தோம் என்பதே எனக்கு தெரியவில்லை” என்கிறார் சுஜாதாபட்.

பீமா இப்போது பல பேரை புதைத்ததாகச் சொல்கிறார். அதில் என்னுடைய மகளும் இருக்கலாம். தேடி கொடுங்கள். அவளுக்கான இறுதி மரியாதை நான் செய்ய வேண்டும் என கண்ணீர் மல்க செய்தியாளர்களிடமும், போலீசரிடமும் மன்றாடிக் கொண்டு இருக்கிறார். 2012 ல் தர்மஸ்தலாவில் ஒரு மாணவி கொல்லப்படுகிறார். இந்த விவாகரத்திலும் போலீசார் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்படுகிறது. இந்நிலையில் இந்த உடல்கள் தோண்டி எடுக்கப்பட வேண்டும் என்று பீமா கேட்டுக் கொண்டார். இதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது. அதற்காக பீமாவும் வரவழைக்கப்பட்டு இருக்கிறார். அங்கே அவரது வழக்கறிஞர்களும் வந்து இருக்கிறார்கள். ஆனால், இந்த பணிக்கு முக்கியமாக வர வேண்டிய போலீசார் சம்பவ இடத்திற்கு வரவே இல்லை. பீமாவின் வழக்கறிஞர்கள் தரப்பில் போலீசார் வரவில்லை என்று குற்றம்சாட்ட, பீமா தப்பித்து செல்வதற்கான வாய்ப்பு இருப்பதாக பதிலுக்கு போலீசார் தரப்பில் குற்றசாட்டை கிளப்பினர்.

இது ஒருபுறமிருக்க, பீமா தனிப்பட்ட முறையில் நீதிமன்றத்தில் கொடுத்த ரகசிய வாக்குமூலங்கள் எல்லாம் யூடியூப் சேனல் ஒன்றில் முழுமையாக வெளியானது. இது எப்படி சாத்தியம்? என்கிற கேள்வியும் உதைக்கிறது. இந்நிலையில் பீமா, உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி, கர்நாடக முதல்வர் உள்ளிட்டோருக்கு ஒரு கடிதம் எழுதி இருக்கிறார். அதில், எனது உயிருக்கு பாதுகாப்பு தர வேண்டும். நான் பெரிய மனிதர்களை பகைத்துக் கொண்டு இவ்வளவு பெரிய விஷயத்தை வெளியில் சொல்கிறேன்.



ஆகையால் எனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருக்கிறது. போலீசார் மீதும் எனக்கு நம்பகத் தன்மை இல்லை எனக் கோரியுள்ளார்.

2012 ஆம் ஆண்டு நடந்த கொலை வழக்கு தொடர்பாக அப்போது பெரும் போராட்டமே தர்மஸ்தலாவில் நடந்திருக்கிறது. அப்போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகர்கள், 1985 ஆம் ஆண்டு வாக்கில் 400க்கும் மேற்பட்ட மர்ம மரணங்கள் தர்மசாலாவில் நடைபெற்றுள்ளது. ஆனால் அதைப் பற்றி யாருமே பேசவில்லை. 2012 ஆம் ஆண்டு இந்த விவரம் நடந்த போது 463 கொலைகள் நடைபெற்றுள்ளது. அதில், 95 இளம்பெண்கள் என பதிவு செய்து இருக்கிறார்கள்.

அதன் பிறகு 12 ஆண்டுகள் ஆகி விட்டது. இந்த 12 ஆண்டுகளில் இந்த கொலைகள் அதிகரித்து இருக்கிறதா? இந்த கொலைகளை செய்தது யார்? என்கிற கேள்விக்கான பதில் இல்லை கிடைக்கவே இல்லை. அதே நேரத்தில் ஒரு பக்கம் போலீசார் அமைதி காத்துக் கொண்டு இருக்கிறார்கள். விசாரணையில் பெரிய அளவு சுணக்கம் இருக்கிறது என்கிற குற்றச்சாட்டுகளும் எழுந்துள்ளது. இப்போது பீமா இந்த விஷயத்தை பெரிதாக்கியதற்கு பிறகும்கூட, 29 வயதான சப் இன்ஸ்பெக்டரைத்தான் இதனை விசாரிக்கும் அதிகாரியாக நியமித்து இருந்தார்கள். 100க்கும் மேற்பட்ட பெண்கள் கொலை செய்யப்பட்டுள்ளதான குற்றச்சாட்டிற்கு ஒரு சப் இன்ஸ்பெக்டர் அளவிலான விசாரணை அதிகாரியைத்தான் நியமிப்பீர்களா? என்கிற கேள்வியை வழக்கறிஞர்கள் முதல்வரிடம் முன் வைக்கின்றனர்.

இந்த விவகாரத்தில் அரசியல் கட்சிகள் ஏன் மௌனம் காக்கின்றன? என்கிற கேள்வியும் பிரதானமாக எழுகிறது. 12 ஆண்டுகளுக்கு முன்பு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மட்டும் இதை பெரிதாக எழுப்பி இருந்தது. கர்நாடகாவில் உள்ள பிரதான கட்சிகளான பா.ஜ.க, காங்கிரஸ், மதச்சார்பற்ற ஜனதா தளம் மர்ம மவுனம் சாதிப்பதாக குற்றச்சாட்டும் வலுவாகி உள்ளது. இந்த விவகாரம் வெளிச்சத்திற்கு வந்த பிறகு கர்நாடக மாநில முக்கிய பா.ஜ.க தலைவர்களில் ஒருவரான சி.டி.ரவி, இது மஞ்சுநாதர் கோவிலுக்கு களங்கம் ஏற்படுத்துவதற்கான முயற்சி என சப்பைக்கட்டு கட்டியுள்ளார். இது எந்த ஒரு அடிப்படை ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டு” என்கிறார் உள்ளூர் பாஜக எம்.எல்.ஏ.

நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் கொல்லப்பட்டதாக கூறப்படும் விவகாரத்தில், அதனை விசாரித்து விட்டு என்னவென்று சொல்கிறோம் எனக் கூறாமல், இது அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டு என எப்படி சொல்லலாம் என பல்வேறு சமூக ஆர்வலர்களும் கேள்வி எழுப்புகிறார்கள்.

கர்நாடக அரசு, இந்த விவகாரத்தில் சீனியர் ஐ.பி.எஸ் அதிகாரி பிரணவ் மொகந்தி தலைமையில் ஒரு சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைத்து விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது. அவருக்கு உதவியாக மூன்று ஐ.பி.எஸ் அதிகாரிகளான எம்.என். அனுசேத், எஸ்.கே.சௌம்யலதா, ஜிதேந்திர குமார் தயாமா ஆகியோர் இருப்பார்கள் என்றும் கூறியிருந்தது. சிறப்பு விசாரணைக் குழுவில் சேர விரும்பவில்லை என்று இரண்டு அதிகாரிகள் தெளிவுபடுத்தி உள்ளனர். அவர்கள் இதை அரசிடம் தெரிவித்து, விலகுவதில் உறுதியாக உள்ளனர். சிறப்பு புலனாய்வுக்குழு இன்னும் விசாரணையை ஆரம்பிக்கவில்லை.

இந்த விவகாரத்தில் முழு உண்மையும் வெளியாக வேண்டும் என்றால் சி.பி.ஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் எனக் கோரிக்கை வைத்து வருகிறார்கள் சமூக ஆர்வலர்கள். ■

**Owned, Published and Printed by: S.P. RAMANATHAN, at No. 3-224/1, Musuvanuthu, Dindigul, Tamilnadu – 624619. and Printed at CHENNAI OFFSET PRINTERS, No. 19/1,21/2, Kitabathkhan Bahadur Street, Ellis Road, Chennai – 600002. EDITOR: S.P. RAMANATHAN**
**All rights reserved. Legal jurisdiction Chennai city court only. Nothing in Paraparappu Cheithi is intended to defame any person. But expressed in faith, pursuit of truth and public good.**

# வாரம் ஒரு நாள் விடுமுறை..!

## அசத்தும் எஸ்பி ஸ்டாலின்..!



எஸ்.பி.ஸ்டாலின்

**தமிழகத்தின் கடைக்கோடி மாவட்டமான கன்னியாகுமரி சிறிய பரப்பளவே கொண்டதாக இருந்தாலும், ஒரு காலத்தில் இம்மாவட்டத்தில் ஆள்கடத்தல், கொலை, கொள்ளை என பல்வேறு சமூக விரோத செயல்களுக்கு முதன்மை மாவட்டமாக விளங்கியது.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் தான் சிறைச்சாலையிலேயே பழிக்கு பழி வாங்கும் நடவடிக்கையாக ரவுடியே மற்றொரு ரவுடியின் தலையை வெட்டி மக்கள் கூடும் பேருந்து நிலையத்தில் காட்சி பொருளாக்கியதும், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பே ரவுடி ரவுடியை துப்பாக்கியால் சுட்டதும், நீதிமன்றத்தில் நீதிபதியின் கண்முன்னே மற்றொரு ரவுடியை ரவுடி ஒருவன் வெட்டி வீழ்த்தியதுமாக இருந்து வந்தது குமரி மாவட்டம். இந்நிலையில்தான் இளைஞர், மருத்துவர், சுருசுருப்பாக வலம் வரும் காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் ஸ்டாலின் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராக பதவியேற்றார்.

மருத்துவர் ஸ்டாலின் பதவியேற்றதும், அதிரடியாக களமிறங்கி ஆங்காங்கே அழகு நிலையம் (Spa என்ற பெயரால் நடத்தப்பட்ட விபச்சாரத்தை முடிவுக்கு கொண்டு வந்தார். பக்கத்து மாநிலத்திருந்து கடத்தி வரப்பட்ட லாட்டரி சீட்டு விற்பனை காணாமல் போனது. பல்வேறு குற்ற செயல்கள் குறைக்கப்பட்டது. மாவட்டத்தில் நடந்த மிகப்பெரிய பிரச்சனை கனிமவள கடத்தல் முறைப்படுத்த பட்டது. மாவட்டத்தின் போக்குவரத்து சீர் செய்யப்பட்டது.

இப்படியான வளர்ச்சி பணிகள் செம்மைபடுத்தப்பட்டாலும், மாவட்ட மக்கள் பயமின்றி வாழ களமிறங்கிய எஸ்.பி.ஸ்டாலின் பல்வேறு காவல் நிலையங்களுக்கும் திடீர் ஆய்வு மேற்கொண்டு காவலர்களின் பணிகள் சோதனை உட்படுத்தப்பட்டது. இதில் சில காவலர்கள் செய்யும் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டு, உடனுக்குடன் பணி மாற்றம் கொண்டு வரப்பட்டது. இது மட்டுமல்லாமல், கஞ்சா, 24 மணி நேர டாஸ்மாக் சமாசாரங்கள் காணமல் போனது. அதேநேரத்தில் காவல் துறையினரை உற்சாகப்படுத்த, தமிழகத்திலேயே சிறப்பான காவல் நிலையங்களுக்கும், காவல் துறையினரையும் கௌரவிக்கும் வகையில் பொன்னாடைபோர்த்தி, சான்றிதழ் வழங்கி உற்சாகபடுத்தினார். இதற்கெல்லாம் ஒருபடி மேலே சென்று காவலர்களுக்கு வாரம் ஒரு நாளில் வார விடுமுறையும் நடைமுறைப்படுத்தினார்.

மேலும், சிறப்பாக பணியாற்றும் காவலர்கள், தடகள வீரர்களும் சிறப்பு







நோ ஹெல்மெட் நோ என்ட்ரி





செய்தார். காவர்களின் குடும்பங்களும் சந்தோஷம் அனுபவிக்க காவலர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் விடுமுறை என தமிழகத்தில் எங்குமே இல்லாத ஒரு புத்தம் புதிய திட்டத்தையே அறிமுகபடுத்தி காவலர்களின் மன அழுத்தத்தையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தினார் மருத்துவர் ஸ்டாலின் ஐ.பி.எஸ்.

இதுவரை சுமார் 10 வருடங்களுக்கு மேல் பணியாற்றிய எந்த ஒரு காவல் கண்காணிப்பாளரும் மாவட்டத்தில் செய்தியாளர்களை வரவழைத்து ஒரு கலந்தாய்வு கூட்டம் நடத்தியது கிடையாது. ஆனால் ஸ்டாலினோ அடிக்கடி செய்தியாளர்களை அலுவலக அரங்கில் கூட்டி, செய்தியாளர்களிடம் கலந்தாய்வு செய்கிறார். ஒவ்வொரு காவல்நிலையத்தில் நடக்கும் சம்பவங்கள் காவல் நிலையத்தில் செய்தியாளர்களுக்கும் கிடைக்கும் தகவல்கள் என பல தகவல்களை திரட்டி அதிலும் சாதனை செய்துள்ளார்.

பள்ளி மாணவ மாணவியர்கள் கலந்தாய்வு, கல்லூரி மாணவ மாணவியர்களிடம் கலந்தாய்வு என கலந்தாய்வு பெயரில் நல்ல பல கருத்துகளை பரிமாறிக் கொள்வது தனிசிறப்பு.

இதில் இருசக்கர ஓட்டுனர்களுக்கு நோ ஹெல்மெட், நோஎன்ட்ரி என்ற திட்டமும் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

எனவே மருத்துவர் ஸ்டாலினை போல் ஒரு நல்ல கண்காணிப்பாளரை குமரி மாவட்டம் கொண்டுள்ளதால் இங்கு சட்டம் ஒழுங்கு சிறப்பாக பராமரிக்கப்படுகிறது எனலாம்.

எனவே மருத்துவர் ஸ்டாலினுக்கு பரபரப்பு செய்தி குழுமம் மூலம் ஒரு ராயல் சல்யூட்... ■